Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**Internet Browsing @**
**Secote information Technologies**
(near the parameswara junction)
யாழ். நகரில்...
குறைந்த கட்டணத்தில் அனைத்து கணனிசார் வேலைகளையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்,
- அதிவேக PENTIUM 4 கணனி மூலம்
- இணை சேவை (Internet Browsing)
- இன்ரநெற் போன் நிமிடத்துக்கு 10/- (கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள்)
- Computer printing 1Page 10/-
- Cd Writing 50/- (Computer Type seting)
- Floppy disc, CD என்பன பெற்றுக்கொள்ளலாம்.
- Computer Type Setting

(354)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 17 (20.05.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 228

# யாழ்.செயலகத்தின் முன்பாக இன்று பெரும் மறியற்போர்!

## வலி. வடக்கு பொதுஅமைப்புக்கள் ஏற்பாடு

வலி. வடக்குப் பிரதேசத்தில், மக்களை மீளக் குடியமர்த்தக்கோரி, இன்று யாழ். அரச செயலகம் முன் பாக மாபெரும் மறியற்போராட்டம் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7 மணியிலிருந்து 11 மணிவரை இடம்பெறவுள்ள இம்மறியற்போராட்டத்தில் - வலி. வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போராட்டத்தினால், யாழ். அரச செயலகம் இன்று காலை முதல் நான்கு மணித்தியாலங்கள் முற்றாக ஸ்தம்பிதமடையும். இப்போராட்டத்தினை வலி. வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

வலி. வடக்கு மற்றும் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமுள்ள, பொது மக்களின் குடியிருப்புப பகுதிகளில் உயர்பாதுகாப்பு வலயங்களையும் மற்றும் இராணுவ முகாம்களையும் அகற்றி, அப்பகுதிகளில் பொதுமக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என, நீண்ட காலமாக பல தரப்புகளில் இருந்தும் கோரிக்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான

# புலிகளின் நிலைப்பாடு நாளை அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு குறித்து, நாளை கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் பத்தி ரிகையாளர் மாநாட்டில் அறிவிக்கப்படவுள்ளது.

இடைநிறுத்தப்பட்டிருக்கும் அரசுடனான சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா, இல்லையா என்பது குறித்தும், தற்போதைய அரசியல் நிலைப்பாடு குறித்தும் நாளைய பத்திரிகையாளர் மாநாட்டில், விடுதலைப் புலிகள் விளக்கமளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்செய்தியாளர் மாநாட்டில், விடுதலைப் புலிகளின் அரசிற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொள்வார். (க)

# மண் சரிவில் மரணமானோர் தொகை 500 ஐத் தொட்டது!

## நேற்றைய தினம் மேலும் 25 பேர் பலி

(கொழும்பு)

**தென்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவுகள் காரணமாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை, ஐந்நூறுக்கும் அதிகமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள் ளது.**

**மேற்படி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக, நேற்று நள்ளிரவுவரை கிடைத்த தகவல்களின்படி, மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஐந்நூறையும் தாண்டிச் சென்றுவிட்டதாகத் தெரியவருகிறது. எனினும், மீட்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. இப் பாதிப்புக்கள் குறித்து மேலும் பல தகவல்கள் இன்றைய தினம் வெளி வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**இதனிடையே, நேற்று பகல் மட்டும் மாத்தளை மாவட்டத்திலுள்ள ஊர் பொக்க என்ற பிரதேசத்தில் மூன்று இடங்களில் நடைபெற்ற மண்சரிவு களின்போது இருபத்தைந்து பேர் மரணமடைந்துள்ளனர். (200,01)**




இரத்தினபுரியில் -வெள்ளத்தில் பிரதான வீதி மூழ்கிக்கிடக்கும் காட்சி.

# ராசிக் குழு உறுப்பினர் ஒருவர்

# வடக்கு - கிழக்கில் நிர்வாக அமைப்பு

# ராசிக் குழு உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில், இராணுவத்தின் தேசிய துணைப் படையான ராசிக் குழுவின் உறுப்பினர் ஒருவர் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம், நேற்றுப்பிற்பகல ஒருமணியளவில் இடம்பெற்றது.

வவுணதீவு இராணுவமுகாமைச் சேர்ந்த கதிர்காமர் நவசூரியர் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு வந்துகொண்டிருக்கையிலேயே அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். (01)

# கண்காணிப்புக்குழு அறிவுறுத்து; கடற்படை ஏற்கமாட்டாதாம்!

## கடற்படைத் தளபதி தயா சந்தகிரி

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்டவிரோத அறிவுறுத்தல்களை இனிமேலும் ஏற்றுக்கொள்ள முடியாது என, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்துள்ளார். போர்நிறுத்த உடன் படிக்கைகளை கண்காணிப்புக்குழு, மீறிச் செயற்படுவதாக அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு எழுதிய கடிதத்தில் சாடியுள்ளார்.

திருமலைக் கடலின் பாதுகாப்பு வலயத்தினுள் கடந்த 8 ஆம் திகதி வெடிமருந்துடன் பிடிக்கப்பட்ட புலிகளின் படகு தொடர்பாக, கண்காணிப்புக்குழுவின் அறிக்கையை ஏற்கமுடியாது என சந்தகிரி குறிப்பிட்டுள்ளார். படகில் வந்த புலிகளின் முக்கியஸ்தர் ரஞ்சன் என்றரடார் நிபுணரை விடுவிக்க கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் நிதிநிர்வாக அமைப்பு பிரதமரிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்து!

(கொழும்பு)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று, நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதம மந்திரியைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில், வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்றும், யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை மீளக் கட்டியமைப்பதற்கும், அதற்காக வெளிநாட்டு நிதியுதவியை கையாள்வதற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



கடல்ல தனி ராச்சியம் எண்டு தான் உவைக்கு நினைப்பு..!

# ரோக்கியோ நிதி மாநாட்டை ஒத்திவைக்க கோருவோம்!

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கருத்து

'ஒரு முழுமையான நிதி நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி, அதில் விடுதலைப் புலிகளுக்கு பாரிய பொறுப்பை - அவர்கள் செய்யக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாகவே நாங்கள் பிரதமரைச் சந்தித்தோம்.'

- நேற்று தமிழர் விடுதலைக் கூட்டமைப்புச் செயலாளர் சம்பந்தன் தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது பற்றி, அதில் கலந்து கொண்ட ஜோசப் பரராசசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முக்கியமாகக்(10 ஆம் பக்கம் பார்க்க)


Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290



(சி/913)

# இந்தியாவுக்கு ஆதாயங்கள் பல தரும்

சேது கால்வாய்த் திட்டம் என்பது, பாக்கு நீரிணையையும் மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் இராமர் பாலத்தின் குறுக்கே வெட்டப்படவேண்டிய கால்வாயின் பெயராகும். இதை 'நாஸா' நிறுவனமே - பல்லாண்டுகளுக்கு முன்பு- தலை மன்னாருக்கும், தனுஷ்கோடிக்கும் இடையே ஒரு பாலம் இருந்ததாகச் செயற்கைக்கோள் மூலம் கண்டு பிடித்தது.

இத்திட்டத்தை, ஆங்கில அரசாங்கத்தின் கப்பல்ப் படையைச் சேர்ந்த கொமாண்டர் டெயிலர் என்பவர் 1860 ஆம் ஆண்டு திட்டமிட்டார். அன்றைக்கு அதனுடைய மதிப்பீடு ரூபாய் ஐம்பது இலட்சமாகும். பின்பு டவுண்டஸ்டன் மற்றும் சேர்.ஜான்கூடே என்பவர்கள் இத்திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனப் பல வழிகள் வகுத்தனர். ஆனால், ஒரு சாரார் எதிர்ப்புத் தெரிவித்ததால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மறுபடியும் 1921 ஆம் ஆண்டு சென்னை மாநில அரசு இத்திட்டத்தை வகுத்தும், ஆங்கில ஆட்சியாளர்களின் உதவியின்மையால் நிறைவேற்றப்படவில்லை.

1945 ஆம் ஆண்டு, மறுபடியும் ஆங்கில அரசாங்கம் இத்திட்டத்தைப்பற்றி அறிய ஒரு குழுவை அமைத்தது. ஆனால், இந்தக் குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை.

இந்திய விடுதலைக்குப் பிறகு, 1955 ஆம் ஆண்டு டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தலைமையில், சேது கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலிக்க ஒரு குழு இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. 'சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால், இந்தியாவிற்கு அன்னியச் செலாவணியும், கிழக்குக் கடற்கரையோரமாய்க் கப்பல் போக்குவரத்தும் எளிதாக இருக்கும்' என இக்குழு தனது அறிக்கையில் கூறியதோடு, உடனே இத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமெனவும் தெளிவாக இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அதற்கு ரூ. 9.98 கோடி திட்ட மதிப்பையும் அக்குழு வெளியிட்டது.

சேர்.ஏ.இராமசாமி முதலியார் குழுவின் அறிக்கையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இந்திய அரசாங்கம் விட்டுவிட்டது. 1963 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் நான்காவது திட்டக் காலத்தில் இந்தச் சேது கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டுமென முடிவு செய்தும், இத்திட்டம் செயல் வடிவம் பெறாமல் போய்விட்டது.

அதன்பிறகு, டாக்டர் நாகேந்திர சிங் குழு (1963 இல்) அமைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு, வெங்கடேஸ்வரன் தலைமையில் ஒரு குழு இத்திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்டது. இந்தக் குழு இந்தத்திட்டத்தை நிறைவேற்ற சுமார் 37 கோடி ரூபா செலவாகும் என்றும், ஆனால், இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி வருவாய் உள்ளதெனவும் கூறியது.

அதன்பின்பு இறுதியாக எச்.ஆர். இலட்சுமி நாராயணன் தலைமையில் ஐவர் குழு ஒன்றும் மத்திய அரசால் 1981 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இக்குழு, தமிழகமெங்கும் சென்று, இத்திட்டத்திற்கான பல்வேறு தரப்பாளர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தது.

இத்திட்டத்தின் பயனைப் பற்றி 1981 - 82 ஆம் ஆண்டு மத்திய அரசின்குழு கீழ்க்குறிப்பிட்டவாறு ஆராய்ந்து மதிப்பிட்டது.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரத்தில் தொடர்ச்சியான கடல்வழிப் போக்குவரத்திற்கு வழியில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்தினால், இந்துமகா சமுத்திரமும் வங்கக் கடலும் இணைய வாய்ப்புள்ளது. பாறைகளால் அமைந்த இராமர் பாலத்தை வெட்டி இணைத்தால் கடல் வழிப்போக்குவரத்து வசதியாக இருக்கும்.

சேது கால்வாய் திட்டமும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் ஒருங்கிணைந்தவையாகும். சேது சமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்தினால் தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சியும் முழுஅளவு அதிகரிக்கும். தூத்துக்குடியிலிருந்து கீழ்க்கண்ட துறைமுகங்களுக்குப் பயணம் செய்யும் நேரமும் குறையும்.

★ தூத்துக்குடியிலிருந்து சென்னை- 434 மைல் (மிச்சப்படும் தூரம்).

★ தூத்துக்குடியிலிருந்து விசாகப் பட்டினம் - 376 மைல் (மிச்சப்படும் தூரம்).

★ தூத்துக்குடியிலிருந்து கொல்கத்தா - 340 மைல் (மிச்சப்படும் தூரம்)

இக்கால்வாயினால் பயணம் செய்யும் தூரம் குறைவதால் கப்பலின் எரிபொருள் மிச்சப்படும். இதனால் இந்தியாவின் அந்நியச் செலாவணிச் செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வோர் ஆண்டும் மிச்சப்படும்.

இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி கணிசமான அளவு உயரும். இந்தக் கால்வாயின் மூலம் தமிழகத்தின் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேஸ்வரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப்பட்டினம், கொல்கத்தா வரையுள்ள கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும்.

இக்கால்வாய் வெட்டப்பட்டால் தூத்துக்குடித் துறைமுகத்தில் வளர்ச்சி ஏற்பட்டு, அதன்மூலம் பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப்பட்ட பகுதிகள் முழுவதும் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறும்.

இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால், இந்தியாவின் தென் பகுதியில் அந்நியச் சக்திகள் ஊடுருவாமல் அது ஓர் அரணாக விளங்கும்.


இக்கால்வாயின் மூலம் மீன்பிடித் தொழில் தென்னிந்தியாவில் வளர்ச்சிபெறும். மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பு வளையமாகத் திகழும்.

நிலம் வழியாகச் செல்லும் நிலக்கரி, சிமெண்ட், உப்பு, உரங்கள், கடல் உணவு வகைகள், பருப்பு வகைகள், வற்றல், பருத்தி போன்ற பொருட்களைக் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக இந்தியாவின் பிற பகுதிகளுக்குக் கொண்டுசெல்ல இக்கால்வாய் மிகவும் உதவியாக இருக்கும்.

தற்போது கப்பல்கள் யாவும் இலங்கையைச் சுற்றிச் செல்கின்றன. இதனால் புயல் அபாயங்களில் சிக்கிக் கொள்ள நேர்கிறது. சேதுக் கால்வாய் மூலமாகக் கப்பல்கள் சென்றால், புயல் அபாயம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை.

இக்கால்வாய் ஒரு சுற்றுலா மையமாக அமைந்து, உலகின் பல பகுதிகளிலிருந்து பயணிகள் வர வாய்ப்புள்ளது.

ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்கள் இக்கால்வாயினால் செய்யப்பட்டால் இந்தியாவின் வளர்ச்சி அதிகரிக்கும்.




## சேது சமுத்திரத் திட்டம்

### இந்தியத் தரப்பிலிருந்து ஓர் பார்வை

இத்திட்டம் பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாதகமானதாகும். இந்தியாவின் நலன் கருதி உடனடியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் கப்பல் மற்றும் கடல்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் 1981, 82 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

இத்திட்டத்தின் ஓர் அங்கமாக இருக்கின்ற தூத்துக்குடித் துறைமுகம், சேலம் இரும்பாலை ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கோரி 23.7.67 அன்று அண்ணா வலியுறுத்தினார். கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, மத்திய அரசை பல முறை வலியுறுத்தியுள்ளார். இறுதியாக 8.5.2002 அன்று பிரதமருக்குத் திரும்பவும் கடிதம் எழுதியுள்ளார் கலைஞர். தி.மு.க சார்பில் தரை வழிப் போக்குவரத்துத்துறை அமைச்சராக மத்திய அரசில் டி.ஜி.வெங்கட்ராமன் இருந்தபோது, இத்திட்டத்தை நிறைவேற்ற பல ஆய்வுகள் நடத்தித் திட்டத்திற்கான மதிப்பீடுகளைச் செய்தார்.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்த தொழில்நுட்பத்தை அறிய 'நீரி' நிறுவனத்தை மத்திய அரசு நியமித்தது. அந்த 'நீரி'யின் அறிக்கை மத்திய அரசுக்குக் கிடைக்கக் காலதாமதம் ஆனது. அடிப்படையில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் சாத்தியக் கூறுகளை ஆராய ஜஸ்வந்த் சின்ஹா நிதியமைச்சராக இருந்தபோது பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டது.

இப்போதைய பட்ஜெட்டில் நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங் முதலில் நிதி ஒதுக்கவில்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள தமிழகக் கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று, மறுபடியும் நிதி ஒதுக்க ஒப்புக்கொண்டார். அதன்படி தலை மன்னாருக்கும் ராமேஸ்வரத்துக்கும் இடையில் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான அளவீட்டுப் பணிகள் தொடங்கி விட்டன. இதெல்லாம் நல்ல அறிகுறிகளாக இருந்தாலும், இதில் இன்னொரு சிக்கல்.

சமீபத்தில் இலங்கையில் பன்னாட்டுப் பொறியாளர்களின் மாநாடு நடைபெற்றது. அதில் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் 26 கி.மீ நீளமுள்ள அனுமன் பாலத்தை ஐந்து வருடங்களில் முடிப்பதாக முடிவெடுத்து, அதை இலங்கைப் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க பிரதமர் வாஜ்பாயிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது. ஜப்பான் நாட்டுத் தொழில் நுட்பத்துடன் இதைக்கட்டலாம் என்று ஆராயப்பட்டிருக்கிறது. பாலத்தையொட்டி சிறு கால்வாயை வெட்டி அதில் சிறு கப்பல்கள் போக வழிசெய்யலாம் என்று கப்பல்துறை அமைச்சரான விஜய் கோயல் பிரதமரிடம் தெரிவித்திருக்கிறார்.

இதெல்லாம் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றுவதற்கெதிரான முட்டுக்கட்டைகள். தொடர்ந்து இலங்கை முட்டுக்கட்டைகள் போட்டாலும், தமிழகத்தின் நீண்டகாலக் கனவுத் திட்டமான இது நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை.

*- கே.எஸ்.ராதாகிருஷ்ணன்*

# தொலைந்துபோன ஆவணங்களை பெறுவதற்கு என்ன செய்யலாம்?

## தென்மராட்சி மக்கள் கேள்வி

(மட்டுவில்)

கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களின்போது, இப்பகுதி மக்கள் தமது பெறுமதி வாய்ந்த சொத்துக்கள், வீடுகளை இழந்ததோடு, தமது பிறப்புச் சான்றிதழ், காணிஉறுதி, திருமணச் சான்றிதழ், வங்கிப் புத்தகம், பரீட்சைப் பெறுபேறுகள் போன்ற முக்கிய ஆவணங்களையும் இழந்து நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

இவற்றின் இணைப்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறை இருந்தும் சிலர் இதற்குத் தேவையான ஆவணங்கள் என்ன என்பது பற்றியே தெரியாதுள்ளனர்.

இவற்றுள் மிக முக்கியமான ஆவணமான காணி உறுதியின் பிரதியை, மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள காணிப் பதிவகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். உறுதி இலக்கம், எழுதிய திகதி, எழுதியவர் பெயர் போன்ற விபரங்களுடன். காணிச் சொந்தக்காரர் நேரடியாகக் காணிப் பதிவகத்துடன் தொடர்பு கொண்டால் பிரதியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இலக்கமோ, எழுதிய திகதியோ சரியாகத் தெரியாவிட்டால்கூட எழுதியவர் பெயர் தெரிந்தால் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக ஒரு நொத்தரிஸ் தேடுதல் செய்து இலக்கம் கண்டுபிடிக்கக்கூடிய நடைமுறையும் உண்டு.

இத்தகைய வழிமுறைகள் மூலம பலர் தமது உறுதிகளைப் பெற்றுக் கொண்டபோதும், இன்னும் சிலர் இலக்கமோ, எழுதிய திகதியோ, எழுதியவர் பெயரோ, எதுவுமே தெரியாதவர்களாக உள்ளனர். இவர்களுக்கு காணியுறுதியைப் பெற்றுக் கொள்வது பெருஞ்சிரமமாக உள்ளது. மீள்குடியமர்வுக் கொடுப்பனவு மற்றும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு போன்றவற்றிற்கு காணி உறுதி அவசியமாவுள்ளதால் இதனை, எவ்வாறு பெறுவது என மக்கள் அங்கலாய்த்தவண்ணமுள்ளனர்.

எழுதியவர் பெயரோ அல்லது எழுதிய திகதியோ, இலக்கமோ எதுவுமே தெரியாத ஒருவர் தனது உறுதியைப் பெறுவது மிகவும் சிரமமானது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (24)

# வட - கிழக்குப் பகுதிக் குளங்களை புனரமைக்க அரசு நடவடிக்கை!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள சகல குளங்களையும் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட நிதி உதவிகளைக் கொண்டு மாகாண சபையின் அனுசரணையுடன் குளங்கள் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் காமினி ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் - வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து பாரிய நடுத்தரக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, ரம்பா, சௌந்தர்யா
அருணாசலம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
HANNIBAL
(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.
10.30, 2.30, 6.30
இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய்,
மீரா ஜஸ்மின் நடித்த
புதிய கீதை
(சி-883)


லக்ஷ்மி சினிமா
இணுவில்.

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
உலகத் தமிழ் இனத்தின் கலை, பண்பாட்டுடன் எந்தவித ஆபாசமும் இல்லாமல், தமிழ்ப் பண்பாட்டுடன் தயாரான ஒரே தமிழ்த் திரைப்படம். 1968 ஆம் ஆண்டு வெளிவந்து கொழும்பு கெப்பிட்டல் திரையில் 101 நாட்களும், யாழ்.நகர் வெலிங்டன் திரையில் 91 நாட்களும் ஓடி வசூலில் மாபெரும் சாதனை ஏற்படுத்திய, உலக நாயகன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நாதஸ்வரசக்கரவர்த்தியாக வாழும்,
"தில்லானா மோகனாம்பாள்"
உலக நாயகன் சிவாஜி கணேசன் ரசிகர்கள், யாழ்ப்பாணம். (சி-941)

# வரணியில் மீண்டும் இராணுவமுகாம்

(யாழ்ப்பாணம்)

வரணி சுட்டிபுரத்து அம்மன் ஆலயத்திற்கு முன்னாலுள்ள, வீதிக்கு அருகிலுள்ள காணியில் இராணுவத்தினர் தற்போது புதிதாகப் படைமுகாம் ஒன்றை அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு படையினர் முகாம் அமைத்து நிலைகொண்டிருந்தனர்.

பின்னர், முகாமைவிட்டுப் படையினர் வெளியேறிச் சென்றனர்.

தற்போது மீளவும் படையினர் இவ்விடத்தில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களப்பயிற்சிக்கு யாழ்பாணம் வருகை

பிலியத்தலாவ இலங்கை இறையியற் கல்லூரியிலிருந்து தமது களப்பயிற்சியின் ஓர் அங்கமாக ''விவசாயமும் விவசாயிகளும்'' எனும் விடயம் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வதற்காக, மூன்று மாணவர்கள் கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

குருத்துவப் படிப்பின் ஒரு வருட முடிவில் களப்பணியாக ஒரு ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். அதன்படியே தாம் 'விவசாயமும் விவசாயிகளும்' எனும் விடயம் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ள வந்துள்ளதாகவும் -

இதன் மூலம் யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் சந்தை வாய்ப்புப் பற்றிய பிரச்சினை, இடைத்தரகர்களின் தாக்கம் என்பன பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (46)





தெற்கில் வெள்ளம் பாதித்துள்ள இரத்தினபுரி, களுத்துறைப் பகுதிகளிலிருந்து சில புகைப்படப் பதிவுகள் இவை.

# நாட்டில் சமாதானம் ஏற்படாவிட்டால்; பொருளாதார அபிவிருத்தி சாத்தியமில்லை!

## நோர்வே தூதரக உயரதிகாரி

சமாதானம் இல்லையேல் ஒரு நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்தவோ, அரசியல் உரிமைகளை நிலைநிறுத்தவோ, பொருளாதார அபிவிருத்தியைக் காணவோ முடியாது என நோர்வேத் தூதரக உயரதிகாரி ஒட்லர் லகிறீட் தெரிவித்தார்.

இலங்கை - நோர்வே அரசியலமைப்பு தினத்தையொட்டிக் கடந்த வெள்ளிக்கிழமை கோல்பேஸ் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துபசார வைபவத்தில், புதிய நோர்வேத தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் சார்பில் கலந்துகொண்ட நோர்வேத் தூதரக உயரதிகாரி ஒட்லர் லகிறீட் அங்கு உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் பேசும் போது -

ஒரு நாட்டிற்குச் சமாதானம் என்பது மிகமுக்கியமானது. இங்கு உரையாற்றும் இந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் சமாதானத்தில் ஏற்பட்டுள்ள தற்காலிகத் தடையைப் போக்கசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை உணர்வீர்கள்.

இந்த நாட்டில் யுத்தத்தை இல்லாமல் செய்து, அமைதியான நாடாக மாற்றியமைக்க சகலவற்றிலும் முயற்சி எடுத்து வருகிறோம்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், புதிய நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரடஸ்கர் ஆகியோர் இப்போதைய சமாதான முயற்சியொன்றில் ஈடுபட்டுள்ளனர். இலங்கைக்கு மிகமுக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சமாதானப் பிரச்சினையில் முன்னுரிமை அளித்து, அவர்கள் ஈடுபட்டுள்ளதால் இந்த வைபவத்தில் கலந்துகொள்ள முடியாமற்போயுள்ளது.

என்னைப் பொறுத்தமட்டில் இன்றையதினம் நோர்வே மக்களுக்கும், இங்கு கூடியிருப்பவர்களுக்கும் மிக முக்கியதினமாகும். நாம் இன்று எங்களுடைய அரசியலமைப்பு தினத்தைக் கொண்டாடுகிறோம். இவ்வரசியலமைப்பு அமுலுக்கு வந்து 189 வருடங்களாகின்றன.

பல நாடுகளில் அமுலிலுள்ள அரசியலமைப்பு சட்டத்துடன் ஒப்பிடுகையில், எங்கள் நாட்டிலுள்ள அரசியலமைப்பு இரண்டாவதாக மிகப் பழைமை வாய்ந்ததாகும்.

எங்கள் நாட்டிலுள்ள அரசியலமைப்பிலுள்ள சுதந்திரம், மனித உரிமைகள் போன்றவை இன்று பல நாடுகளிலில்லை.

1814 ஆம் ஆண்டில் எங்களுடைய அரசியலமைப்புப் பிறந்து - எங்களுடைய நாடாளுமன்றத்தை அமைத்த பின்னர், நாங்கள் தொடர்ந்தும் சுவீடன் தேசத்து மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தோம்.

எங்களுடைய சட்டங்களையும், எங்களுடைய பிரச்சினைகளையும் நாங்களே தீர்க்கக்கூடிய எஜமானர்களாக, எங்களுடைய விதியை நாங்களே நிர்ணயித்தோம்.

சுவீடன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோதுகூட எங்கள் விதியை நாங்களே நிர்ணயித்தோம்.

இதனால்தான், அரசியலமைப்பு தினத்தை மிகவும் முக்கியமாகக் கருதி - மே 17 ஆம் திகதி அதைக் கொண்டாடுகிறோம்.

1905 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுதந்திரமாக சுவீடன் தேச மன்னரிடமிருந்து விடுபட்ட பின்னர் இன்றைய தினம் முக்கியம் பெறுகிறது.

அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தால், சுதந்திரத்தின் அருமை, பெருமைகளை, நன்கு தெரிந்துகொண்டுள்ளோம். அதுமட்டுமன்றி - மனித உரிமைகள், ஒரு அரசியலமைப்பின் முக்கியத்துவம் எல்லாம் எங்களுக்குத் தெரியும். எனவே, நாங்கள் பெற்ற இந்த முக்கியத்துவத்தை இன்னும் பலருக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும என்பதுதான் எங்கள் குறிக்கோளாக உள்ளது.

இலங்கையை ஒரு சமாதான நாடாக மாற்றுவதற்கு நோர்வே சகல முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இன்றைய அரசியலமைப்புத் தின வைபவத்திலும்கூட கலந்துகொள்ளாமல் - பிரதி வெளிவிவகார அமைச்சரும், புதிய தூதுவரும் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளமை இதற்கு எடுத்துக்காட்டு.

முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளைப்போல, இலங்கையும் முன்னேற்றம் அடைந்து, ஒரு நல்ல நிலையை அடையவேண்டும். அதே வேளையில் இலங்கையின் வளங்கள், யுத்தக் கருவிகள், கொலைக் கருவிகள் போன்றவற்றிற்குச் செலவிடப்படும் நிதி, மிகவும் மேம்மை வாய்ந்த சமாதான முயற்சிக்கும, பொதுமக்களின் நன்மைக்கும் செலவிடப்படவேண்டும் என்பதுதான் எங்களின் எதிர்பார்ப்பு.

நீண்டகாலமாக இலங்கை யுத்தத்தினால் அனுபவித்த துன்பம் போதும். இனிமேல் சமாதானத்திற்கான மேம்பாட்டோடு, வளர்ச்சியடைந்த நாடாக இலங்கை மாறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆழியவளை திலீபன் மருத்துவமனை முதலாம் ஆண்டு நிறைவுவிழா!

(யாழ்ப்பாணம்)

ஆழியவளை தியாகிதிலீபன் மருத்துவமனையின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு மருத்துவமனை வளாகத்தில் இடம்பெற்றது.

வடமராட்சி வலயக்கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வரன் ஈகச்சுடரேற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியைத் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் ஈழச்செல்வன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்குக் கடற்புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி விடுதலை ஈகச்சுடர் ஏற்றி வைத்தார்.

திருவுருவப் படத்துக்கு மலர் மாலையை தமிழர் புனர்வாழ்வுக் கழக அவுஸ்திரேலிய இணைப்பாளர் சந்துரு அணிவித்தார்.

ஆழியவளை சி.சி.த.க பாடசாலை அதிபர் திரவியராசா வரவேற்புரையை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் ஆழியவளை கிராம அலுவலர் இ.நடராசா, தமிழீழ உளநல வளர்ச்சித்திட்டப் பொறுப்பாளர் அன்பரசன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அரசியற்துறைப் துணைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# பிரதம தபாலக நிர்மாணம்; விரைவில் முடிக்க உத்தரவு!

## அமைச்சர் இம்தியாஸ் பிறப்பித்தார்

(கொழும்பு)



யாழ். பிரதம தபாலகக் கட்டட நிர்மாண வேலைகளை அடுத்தமாத இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

70 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் யாழ்.பிரதம தபாலகத்தை விரைவில் செயற்படவைப்பதற்காக, நிர்மாணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரால் கேட்கப்பட்டிருக்கிறது.

கொழும்புக்கு வெளியே நிறுவப்படும் நவீன வசதிகளைக்கொண்ட தபாலகமாக யாழ்.பிரதம தபாலகம் அமையும் என்று அமைச்சர் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

# மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பெண்கள் அணியை உருவாக்க முடிவு!

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் புதிதாகப் பெண்கள் அணி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் இயங்கிவரும் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு- வன்னிப் பெருநிலப்பரப்பில், கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்குச் சர்வதேசரீதியான பயிற்சிகள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை ஆண்களை மட்டுமே இப்பணியில் ஈடுபடுத்தி வந்த மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில், புதிதாக மகளிர் அணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மகளிர் அணியினருக்குச் சர்வதேசதரத்திலான கண்ணிவெடி அகற்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கண்ணிவெடி அகற்றும் மகளிர் அணியில் இணைந்துகொள்ள விண்ணப்பித்த மற்றும் இணைந்துகொள்ள விரும்பும் பெண்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று காலை 10 மணிக்குக் கிளிநொச்சியில் இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் நிறுவப்பட்டிருந்த அனல்மின் நிலையம் அம்பாந்தோட்டைக்கு

திருகோணமலையில் அனல்மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுமக்கள் மற்றும் சூழலியலாளர்களின் கடுமையான எதிர்ப்பையடுத்தே அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், திருகோணமலையில் அமைக்கத்திட்டமிடப்பட்டிருந்த 300 மெகா வாட்ஸ் மின் உற்பத்தித் திட்டத்தை - அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.

சில மாதங்களுக்கு முன்னர் மின சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரியவிடம் இந்த அனல் மின்சார நிலையத்தை திருமலை-நுரைச்சோலையில் திறப்பதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்தே இந்த அனல் மின்சார நிலையத்தை அம்பாந்தோட்டைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், ஜுலை மாதம் மின்நிலையத்தை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# பிரதேச செயலர் பிரிவுகளில் தேசிய பாடசாலைகள்!

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பிரதேச செயலகப் பிரிவுகள்தோறும் தேசிய பாடசாலைகளை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவேயுள்ள தேசிய பாடசாலைகளின் குறைபாடுகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் அமைக்கப்படவுள்ள தேசிய பாடசாலைகள் - அனைத்து வசதிகளையும் கொண்டதாக நிறுவப்படும். தூரஇடங்களிலிருந்துவரும் மாணவர்கள் தங்கிப்படிக்கும் வசதிகள், கணினிக் கூடம், விஞ்ஞான ஆய்வு கூடம், தொழில்நுட்பக்கூடம் போன்றவற்றுடன் நூலக வசதிகளைக் கொண்டதாகவும் இந்தப் பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்குத் தேவைப்படும் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ரயிலுக்குள் தவறி வீழ்ந்த யாழ்.வாசி படுகாயமடைந்து வைத்தியசாலையில்!

## தேநீர் குடித்துவிட்டு ஓடும் ரயிலில் ஏறியபோது சம்பவம்

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இரவுத் தபால்ரயிலில் சிக்கிப் பயணியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகுமார் (வயது 35) என்பவரே, ரயில் நிலையப் புகையிரத மேடையிலிருந்து கீழே விழுந்து ரயிலுக்குள் சிக்கியவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் வவுனியாவிலிருந்து சென்றுகொண்டிருந்த இரவுத் தபால்ரயில் - அதிகாலை நேரம் அனுராதபுரம் ரயில் நிலையத்தை அடைந்தவேளை, அங்கு தேநீர் குடிப்பதற்காக இறங்கிய சிவகுமார் - தேநீரை வாங்கி அருந்திக் கொண்டிருந்தபோது ரயில மீண்டும் புறப்பட ஆரம்பித்தது.

இதன்போது - அவர் ஓடிவந்து ரயிலில் ஏறமுயன்றபோது திடீரெனப் புகையிரத மேடையிலிருந்து சறுக்கிக் கீழே விழுந்து ரயில் சக்கரங்களுக்குள் கிக்கிக்கொண்டார். உடனடியாக இவர் அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது நிலைமை கவலைக்கிடமாகவே இருப்பதாக, அனுராதபுரம் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## மறியற்போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு

(பாஷையூர்)

வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி யாழ். செயலகம் முன்பாக இன்று நடைபெறவுள்ள மறியற்போராட்டத்தில்- மயிலிட்டி, பலாலி, காங்கேசன்துறை, சேந்தாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் கலந்து கொள்ளுமாறு, மயிலிட்டித்துறைக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

மேற்படி மறியற்போராட்டத்தில், மயிலிட்டித்துறைக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களும் கலந்துகொள்வதற்கு வசதியாகப் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இன்றைய தினம் அனைத்து உறுப்பினர்களையும் சங்கப் பணிமனைக்கு வருகைதருமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(119)

# சங்கீதசபைத் தேர்வுகளுக்கு மருதனார்மடத்தில் கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

வட - இலங்கைச் சங்கீதசபையின் பரீட்சைக்குத் தோற்றும் - தரம் 5 ஆம், 6 ஆம் தேர்வு நாடிகளுக்கான வதிவிடக் கருத்தரங்கு - வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தேர்வு நாடிகள் அனைவரும், மூன்று நாட்களும் கல்லூரியில் தங்கிக் கருத்தரங்கிலே பங்குபற்ற வேண்டும் என்றும் - அதற்கான ஆயத்தத்துடன் வருகைதருமாறும்- வட - இலங்கைச் சங்கீதசபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தரம் ஒன்று தொடக்கம் தரம் 6 வரை சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம், ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(சு.ரா)

# ரத்வத்த பிணை மனுக்கோரல் மீண்டும் தொடர்கதையாகிறது!

## நீதிமன்றின் நிராகரிப்பும் தொடர்கின்றது

(கொழும்பு)

கண்டி - உடத்தலவின்ன பகுதியில், கடந்த தேர்தல் காலத்தில் இடம்பெற்ற 10 முஸ்லிம் மக்களின் படுகொலை தொடர்பாக, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட 15 பிரதிவாதிகளும், தம்மை பிணையில் விடக் கோரி மேல்நீதிமன்றத்தில் மீண்டும் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

மனு மீதான உயர் நீதியரசர்களைக்கொண்ட விசாரணையின் போது, இது எந்தச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரதிவாதிகள் - இந்த மனு குற்றவியல் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவித்தனர்.

மேலும், பிணை மனுவின் அடிப்படையில் வழக்கின் முக்கிய சாட்சிகள், மேல்நீதிமன்ற விசாரணைகளில் சாட்சியளித்துக் கொண்டிருப்பதால், உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ள பிணை மனுவினை எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதிக்குப் பின்னர் தாக்கல் செய்யுமாறு உயர்நீதியரசர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில்

# செருப்பில் பிள்ளையார் படம் இந்து அமைப்பு கண்டனம்!

(கொழும்பு)

வொஷிங்ரனில் பிள்ளையாரின் படம் பொறிக்கப்பட்ட செருப்புகள் விற்பனைக்கு விடப்பட்டிருப்பதைக் கண்டித்து, அகில இலங்கை இந்து காங்கிரஸ் - அமெரிக்க அரசாங்கத்திற்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

கோடிக்கணக்கானோர் வணங்கும் தெய்வமொன்று, வர்த்தக நோக்கத்திற்காக இழிவான வகையில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கண்டித்துள்ள இந்த அமைப்பு -

அமெரிக்க அரசாங்கம் இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுத்து, உலகெங்கும் வாழும் இந்து மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

### இரண்டாவது அகவையில்



பெயர் : த.சுஜிந்தன்
முகவரி : 'ராஜ பவனம', ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

### முதலாவது அகவையில்

பெயர் : அ.பிதுஷன்
முகவரி : பாணாவெட்டி(முகாம்), தொல்புரம்.



### மூன்றாவது அகவையில்

நேற்று முன்தினம் கொண்டாடினார்.

பெயர் : த.பிரிகஷ்வினி
முகவரி : 23/4, மணற்தரை வீதி, கந்தர்மடம்.



### முதலாவது அகவையில்



பெயர் : இ.சயனீதரன்
முகவரி : மல்லாகம்.

### எட்டாவது அகவையில்



பெயர் : செ.குகராஜ்
முகவரி : சிந்துஜா வெதுப்பகம், ஏழாலை.

### முதலாவது அகவையில்

நேற்றுக் கொண்டாடினார்.

பெயர் : சி.ஆதவன்
முகவரி : 'கங்கா போட்டோ', மீசாலை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைச்
------------------
பெற்றார் ஒப்ப..



# சின்னஞ் சிறு செய்திகள்

## மாம்பழத்தின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாம்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

இம்முறை தென்பகுதியிலிருந்து வரும் மக்கள் யாழ்ப்பாணத்து மாம்பழங்களை அதிகளவு கொள்வனவு செய்கின்றமையினால், இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## மேலதிக பஸ்சேவைக்கு பொதுமக்கள் கோரிக்கை

(சரசாலை)

பருத்தித்துறை, தாளையடி ஊடாகக் கிளிநொச்சிவரை நடைபெறும் போக்குவரத்துச் சேவையில், மேலும் ஒரு பஸ்ஸைச் சேவையில் ஈடுபடுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வழியே ஒரு பஸ்ஸே சேவையில் ஈடுபடுவதால், இதில் பயணிப்பவர்கள் இடநெருக்கடியின் மத்தியில் மிகுந்த சிரமப்பட்டே தமது பயணத்தைத் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மருதங்கேணிப் பிரதேசத்திலிருந்து பணிபுரியும் அரச ஊழியர்களும், இந்த பஸ்ஸை நம்பியே தமது கடமைகளுக்குப் போய் வருவதாகவும் தொிவித்துள்ளனர்.

(34)

## சாரதி அனுமதிப்பத்திரம் கண்டெடுப்பு

கிருலப்பனை, கொழும்பு-5 என்ற முகவரியைச் சேர்ந்த, விவேகானந்தன் பிரகாஷ் என்பவருடைய மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர், அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

(வலி.வடக்கு)

இன்று நடைபெறவிருந்த வலி. வடக்கு பிரதேச செயலர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்



## பஸ்டர் கீட்டன்

மௌனப் படங்கள் வெளிவந்துகொண்டிருந்த காலம்தான் 'நகைச்சுவை'ப் படங்களின் உன்னதமான காலம் என்று கூறலாம்.

பஸ்டர் கீட்டனும் மௌனப்படக் காலத்திலேயே டைரக்டராக அறிமுகமானவர்தான். ஒரு சர்க்கஸ் வித்தைக்காரரின் விறுவிறுப்பான அங்க அசைவுகளும், உடற்பயிற்சி மாதிரியான உடல் அசைவுகளும் கீட்டனின் சிறப்பு அம்சமாகும். படத்தில் இந்தக் காட்சிகள் முக்கியத்துவம் பெறுவதற்காக இவர் 'டீப் ஃபோகஸ்' (DEEP FOCUS) முறையைக் கையாண்டார். அதாவது, காட்சிகளை 'ஷொட்'களாகப் பிரிக்காமல், தொடர்ந்து படம் பிடிக்கும் முறையில் எடுத்தார். சாப்ளின் தன்னுடைய முகபாவங்களை வெளிப்படுத்தி நகைச்சுவையை ஏற்படுத்தினார். ஆனால், கீட்டன் முகத்தில் எந்தவிதமான உணர்வையும் வெளிப்படுத்தாமல் நகைச்சுவையை ஏற்படுத்தினார்.

ஏராளமான ஒரு ரீல், இரண்டு ரீல் படங்களை இயக்கிய கீட்டன், 1923 ஆம் வருடத்திலிருந்து நீளங்கூடிய படங்களை இயக்கத் தொடங்கினார். இந்த வகையில் முதல் படம் த திறி ஏஜஸ் (THE THREE AGES), அதேவருடம் வெளியான அவ ஹொஸ்பிற்றாலிட்டி (OUR HOSPITALITY), 24 இல் வெளியான ஷெர்லக் ஜூனியர் (SHERLOC JUNIOR), அதேவருடம் வெளியான த நேவிகேட்டர் (THE NAVIGATOR) ஆகிய படங்கள் மகத்தான வெற்றிபெற்றன. ஆனால், 1926 இல் வெளியான கீட்டனின் த ஜெனரல் (THE GENERAL) படம்தான் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பேசும் படங்களின் பிறப்புடன் கீட்டனது திரைப்படப் பணிகள் மந்தநிலையை அடைந்தன.

1927 இல் வெளியான இவரது கொலிஜ் (COLLEGE) பட்த்தைப் பிற்கால ஐரோப்பிய டைரக்டரான லூயிஸ் பியூனல் (LUIS BUNEL) வெகுவாகப் பாராட்டுகிறார். உத்வேகம்மிக்க கீட்டனின் அணுகுமுறையையும், ஜேர்மானியத் தன்மையுடன் கூடிய யதார்த்தப் பாணியையும் பியூனல் திறந்த மனதுடன், அளவுக்கு அதிகமாகவே பாராட்டுகிறார்.

கீட்டன் - சாப்ளினினைப்போல், ஏன்? எதனால்? எதற்கு? போன்ற விடயங்களில் கவனம் செலுத்தவில்லை. மாறாக எப்படி? என்பதில் மட்டுமே இவரது கவனமிருந்தது. இவரது படைப்புக்களைப் பற்றிய ஒட்டுமொத்தமான மறுமதிப்பீட்டுச் சர்ச்சை நடந்துகொண்டிருந்தபோதுதான் அவர் மரணமடைந்தார்.

கீட்டனின் படங்களில் - மிக உயரிய தரத்தில் நகைச்சுவை கையாளப்பட்டது. உடலில் சிலிர்ப்பு ஏற்படும் அளவில் வளர்ந்துகொண்டே வரும் காட்சியின் இறுதியில், அடக்கமுடியாத சிரிப்புத் தோன்றும். ' அவ ஹொஸ்பிற்றலிட்டி' படத்தில் பயங்கரமான நீர்வீழ்ச்சியின் விளிம்புப் பகுதியில் சுயநினைவில்லாதபடி நடந்து சென்று, தன்னுடைய பெண்களைக் காப்பாற்றுகிறார். 1928 இல் வெளியான ஸ்ட்ரீம் போட் பில் ஜூனியர் (STEAM BOAT BILL JUNIOR) படத்தில் அதேபோல் தெளிவான மனநிலையிலுள்ள ஒரு பாத்திரம், தன்னுடைய வீட்டில் இடைவிடாத குழப்பங்களுக்கு மத்தியில், சுற்றிச் சுழன்றடிக்கும் சுழற்காற்றில் சிக்கி உழல்வதையும் குறிப்பிடலாம்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் முகத்தை உணர்ச்சியற்ற தன்மையில் வைத்துக் கொள்வதில் கீட்டன் வெகு கவனமெடுத்துக்கொண்டார். ஆனால், அதேசமயம் அவரது உடல் இயந்திரம்போல் இயங்கியது. "உணர்ச்சியற்ற அவரது முகமே மற்ற நடிகர்களைவிட உணர்ச்சிகரமானது. அவரது கண்கள் அசையும்போது அதுவொரு சிலையின் கண்கள் உருண்டு அசைவது போலத் தோன்றுகிறது" என்று ஜேம்ஸ் ஆகி என்கிற விமர்சகர் குறிப்பிடுகிறார்.

பார்வையாளர்களின் கவனத்தைக் கவர, கமராவை இவர் பெரிதாக நம்பியிருக்கவில்லை. சம்பவத்துக்கான காரண காரியம், சூழ்நிலை, சென்ட்டிமென்ட் போன்றவற்றிலும், வலுவான சம்பவக் கட்டுமானத்திலும் தான் கவனம் செலுத்தினார். கீட்டனின் திறமையை வெகுகாலமாகக் குறைவாகவே மதிப்பிட்டு வந்தனர். தேர்ந்த விவாதங்களும், சரியான விமர்சனங்களும் தொடர்ந்து நடைபெற்று- கீட்டனின் படங்களை வைத்து அவர் ஒரு 'மேதை' என்பதைப் பின்னரே ஒப்புக்கொண்டார்.

ஒரு நடிகர், இயக்குநர் என்கிற வகையில் - இயல்பாகவும், யதார்த்தமாகவும் தன்னுடைய படங்களில் அதிககவனம் செலுத்தியிருக்கிறார். 'ஷெர்லாக் ஜூனியர்' படத்தில் ஒரு சினிமா ஒப்பரேட்டராக வேடமேற்ற அவர், தன்னுடைய கனவுக் காட்சிகளைப் புரொஜெக்டர் பாணியில் விரைவாக வெளிப்படுத்திவிடுகிறார். த ஜெனரல் படத்தில் ரயில் வண்டியொன்று பாலத்திலிருந்து விழுவதையும் குறிப்பிடலாம். மௌனப்பட காலத்தை நினைக்கும் பொழுது இது நிச்சயம் செலவு மிகுந்த ஒரு காட்சியே என்பதை உணரலாம். 1922 இல் வெளியான கொப்ஸ் (COPS) படத்தில் அப்பாவியான கீட்டனை நகரப் பொலிஸ் மொத்தமும் சேர்ந்துகொண்டு துரத்துகிறது. இந்தவொரு காட்சியில் சமூகத்தின் குழப்பமானநிலை தெளிவாக உணர்த்தப் படுகிறது.

கீட்டன் தன்னுடைய படத்தின் ஒவ்வொரு ஃபிரேமிலும் உயர்ந்தபட்ச கலைத் தன்மையைப் பிரதிபலிக்கச் செய்தவர். அவரது ஆழ்ந்த கலையுணர்வும், அதை வெளிப்படுத்தும் திறனும் அந்தக் காலகட்டத்துடன் பொருத்திப் பார்க்கும்போது நம்மை வியப்படையவே வைக்கிறது. கீட்டனின் அணுகுமுறைகள் இன்றைக்கும் திரையுலக வட்டாரங்களில் வியப்புடன் பேசப் படுகின்றன. (முற்றும்)





# திரை விமர்சனம்

## காதல் சடு குடு

விக்ரம் நடித்து வெளிவரும் படங்கள் என்றாலே விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் காலம் இது.

சரி, நடிப்பு இருக்காது என்று தலைப்பிலேயே தெரிந்துவிட்டாலும், காதலாவது இருக்குமா என்றால், அதுவும் இல்லை. விறுவிறுப்பு அடுத்தடுத்து கிடைக்கும் என்று நம்பிக்கொண்டே போனால் ஏமாற்றம்தான்.

ஆதரவு இல்லாமல் வரும் இளைஞன், ஒரு குடும்பத்தோடு இணைந்து தனக்கான துணையைத் தேர்ந்தெடுப்பதுதான் கதை.



படம் அதிககாலம் தயாரிப்பில் இருந்ததால் -விக்ரம், சேது விக்ரம், சாமுராய் விக்ரம், ஜெமினி விக்ரம் என்று வகைவகையாகத் தெரிகின் றார்.

படத்தில் கதாநாயகனுக்கு இணையான பாத்திரம் பிரகாஷ்ராஜுக்கு வழக்கம போல் குரல் நடுங்கி, கைவிரல் காட்டிப் பேசுகிற அதே ஸ்டைல். ஒவ்வொரு தடவையும் அவரிடம் வகைதொகை தெரியாமல் மாட்டிக்கொள்ளும்போது, எதிர்காலத்தில் அவர் மகளைத்தான் காதலிக்கப்போகிறார் என்று நிச்சயமாகத் தெரிந்துவிடுகிறது. அடுத்த கணத்திலேயே அம்மா சொல்லைத் தட்டாத மகளாகப் பிரியங்கா திரிவேதி வருகிறார். நிறையத் துள்ளல். கீச்சிடுகிற பின்னணிக்குரல் அந்த முகத்துக்குச் சரியாகப் பொருந்துகிறது.

விக்ரம் பெண்களோடும், பிள்ளைகளோடும் ஓடுகிற ரயிலில் ஆடும் காட்சியிலும், பிரபுவின் கமரா விளையாடுகிறது. படத்தின் கலகலப்புக்கு விவேக்தான் உத்தரவாதம் தருகிறார்.

இயக்குநர் துரை இன்னும் பலமான கதையைத் தேர்தெடுத்திருக்கலாம்.

# கணவன் - மனைவி சேர்ந்து தீர்மானம் எடுப்பதே சிறந்தது

பணமும் பல குடும்பங்களில் பிரச்சினையை ஏற்படுத்தும் ஒன்றாகி விடுகிறது. இது எனது பணம். இது எனது பெற்றோர் தந்த பணம் என்ற மனநிலையை விட்டு, இது எமது பணம் என்ற மனநிலைக்கு இருவரும் வரவேண்டும். வரவையும் செலவையும் எழுதுவது நன்று. முழுமையான விதத்தில் எழுதமுடியாதிருந்தாலும், ஓரளவுக்காவது பொதுவான விதத்தில் எழுதுவது சாலச்சிறந்தது. இதனால், நன்மைகள் உண்டு. எழுதும்போது வருமானத்துக்கு ஏற்ப செலவுசெய்யப் பழகலாம். அதே போன்று எமது வருமானத்தில் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். சேமிப்பு இரு வகையாகலாம். ஒன்று - மாதாமாதம் வரும் வருமானத்தில் சிறுதொகையைச் சேமிப்பது. மற்றது - வீடுகட்ட அல்லது ஏதாவது முக்கியமான பொருட்களை வாங்கக் கடன்படலாம். அதனை மாதா மாதம் செலுத்தும்போது அதுவும் சேமிப்பைப் போன்றதே.



தனது பெற்றோர் அல்லது மாமா மாமியால் வரும் பிரச்சினைகளும் உண்டு. திருமணம் முடித்ததும் புதிய தம்பதிகள் தனிமையாகக் குடித்தனம் நடத்துவதே சாலச்சிறந்தது. ஏனென்றால், புதிதாகத் திருமணம் முடித்ததும் இருவரும் ஒருவருக்கேற்ப மற்றவர் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளப் பழகவேண்டியுள்ளது. குடும்ப வாழ்வு என்றால் இப்படித்தான் என்று இருவரும் தத்தமது உள்ளத்தில் பல சிந்தனைகளை வைத்துக்கொண்டே திருமணம் முடிப்பர். பெற்றோரைவிட்டு - மற்றவரைத் திருமணம் முடித்துக் குடும்பவாழ்வு வாழ வருவது ஒருவரின் உதவியுடன் மற்றவர் வளரவே. அதன் பொருள் முற்றாகப் பெற்றோரைக் கைகழுவி விடுவது என்பதல்ல. திருமணத்தின் பின் பெற்றோரில் தங்காது, பெற்றோரின் உதவியின்றி கணவன் - மனைவி ஒருவர் மற்றவரின் உதவியுடன் வாழப் பழகவேண்டும்.

பெற்றோர்கள்- பிள்ளைகளைத் திருமணம் முடித்து வைத்தாலும், பிள்ளைகளைக் கைவிடமுடியாது கஷ்டப்படுவர். தாய்- பிள்ளையின் தொடர்பிலிருந்து பிள்ளையின் பிறப்புடன் தூரமாகிறாள். அதுவரை தனது வயிற்றில் ஆழமான உறவுடன் பிரியாது வாழ்கிறாள். அதன்பின்பு தாய்ப் பாலை நிறுத்தியதும் பிள்ளையிலிருந்து இரண்டாவது பிரிவு ஏற்படுகின்றது. அதன் பின்பு பிள்ளை பாடசாலைக்குப் போகத் தொடங்கியதும் மூன்றாவது பிரிவு ஏற்படத் தொடங்குகின்றது. நான்காவதாகத் திருமணத்துடன் பிரிவு ஏற்படுகின்றது. திருமணப் பிரிவுடன் பிள்ளை - பெற்றோரிலிருந்து முழுமையாக விடுபட்டு, சுயாதீனமாக வாழப் பழகுகிறது. இது பெற்றோருக்குக் கடினமானதொன்றாகும்.

பெற்றோருடன் வாழாது- வேறாக வாழ்ந்தாலும், பெற்றோர் வேறு வீட்டில் வாழ்ந்த வண்ணம் புதிதாகத் திருமணம் முடித்த தம்பதியினரை நிர்வகித்துக்கொண்டிருப்பர். தொலைபேசி மூலம் அல்லது அடிக்கடி வீட்டுக்கு வந்து தமது கருத்தைத் திணித்து, அவர்கள் சுயாதீனமாகத் தீர்மானமெடுத்து வாழவிடாது நிர்வகிப்பர். இதனால் கணவன்- மனைவிக்கிடையில் பிரச்சினைகள் எழலாம்.

சில பெற்றோர் விசேடமாகக் கணவனை இழந்த விதவைத் தாய் தனது பாதுகாப்புக்காகப் பிள்ளைகளை அளவுக்கதிகமாகத் தன்னில் தங்கப் பண்ணி எல்லா உதவிகளையும் பிள்ளைக்குச் செய்வாள்.

(தொடரும்)

- எஸ்.ஜே. யோகராஜா

# வாரம் ஒரு யோகாசனம்

## ஒட்டியானா



கால்களை ஒரளவு அகலத்திற்கு அகற்றி வைத்துக்கொண்டு நிற்க வேண்டும். முதுகைச் சற்று முன்னால் வளைத்துக் கொண்டு, கைகளை தொடை மீது வைத்துக்கொள்ள வேண்டும். வயிற்றை இறுக்கமில்லாமல் தளர்த்திவிட வேண்டும். பின்னர் மூச்சை சிறுக்கச் சிறுக்க வெளிவிட வேண்டும். அதேசமயம் வயிற்றை உட்புறமாக 'எக்க' வேண்டும். இந்தநிலையில் 5 அல்லது 6 வினாடிகள் இருக்கவேண்டும். பின்னர் வயிற்றைத் தளர்த்தி, மூச்சை நன்றாக இழுத்து, நிமிர்ந்து நின்று இளைப்பாற வேண்டும். உணவருந்தி 6 மணித்தியாலங்களின் பின்பே செய்யவேண்டும். காலையில் செய்தல் நன்று. மூன்று தடவைகள் செய்தாற்போதும்.

### ஒட்டியானாவின் நன்மைகள்

உடல் சுத்தமடையும், இறுக்கமடையும். மலச்சிக்கல் இருக்காது, சிறுகுடல், பெருங்குடல் அசைக்கப்படுவதால் குடலில் ஒருவித அழுக்கும் இருக்காது. விதானம் நன்றாக வேலை செய்யும். குடலில் நீரூற்று அளவோடு சுரக்கும். ஜீரண சக்தியைக் கொடுக்கும். வயிற்றில் கொழுப்பு, ஊளைச்சதை வராமல் தடுக்கின்றது. உணவின் சாற்றை உள்ளிழுத்து இரத்தத்தில் கலக்க வைக்கிறது. நரம்புகளை வேலை செய்யத் தூண்டுகின்றது. வயிற்றுக்கு மருந்தே இதுவாகும்.

கற்றுத்தருபவர் `மா.மகாநேசன் (கரவெட்டி)

## விருதுகள் அள்ளும் 'தேவதாஸ்'



தென்னாபிரிக்காவில் நடைபெற்ற திரைப்பட விழாவொன்றில் ஹிந்தியில் வெளியான 'தேவதாஸ்' திரைப்படம் பல விருதுகளையும் அள்ளிச்சென்றிருக்கிறது.

சிறந்த திரைப்படம், நடிகர், நடிகை, இயக்குநர், துணைநடிகர், பாடல், பின்னணிப் பாடகர் மற்றும் தொழில்நுட்பங்களை 'தேவதாஸ்' பெற்றிருக்கிறது.

வருடாந்தம் 800 இற்கும் அதிகமான திரைப்படங்களைத் தயாரித்து வழங்கும் இந்தியத் திரைப்பட உலகில், 'தேவதாஸ்' படம் பலகோடி ரூபா செலவில் பிரமாண்டமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் புகழ்பெற்ற காதல் காவியமான தேவதாஸை மையமாக வைத்து இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடும் இயக்குநர் சஞ்சய் லீலா பன்சாலி, இதனைக் கடவுளின் அருளால்தான் சிறப்பாக உருவாக்க முடிந்ததாகக் கூறுகிறார்.

## வாகனம் செலுத்திக்கொண்டே



வாகனங்களை ஓட்டிச்செல்லும் போது கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகக் கார் முன் கண்ணாடிகளைத் தொலைபேசியின் பேசும் பகுதியாக மாற்றிவிட (பேசும் விண்ட் ஸ்கீரின்) புதிய முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வாகனம் ஓடுபவர் இனி ஒரு கையால் ஸ்ரியங்கைப் பிடித்துக்கொண்டு, மறுகையால் கைத்தொலைபேசியைப் பிடித்துக் கதைத்துக்கொண்டு அவதிப்படத் தேவையில்லை.

## இனித் தொலை பேசலாம்

வாகனத்தைச் செலுத்திக்கொண்டே, கார் தன்பாட்டுக்கு வின்ஸ் ஸ்கிரீனுடன் கதைத்துக் கொள்ளலாம். வின்ஸ் ஸ்கீரினிலுள்ள உபகரணம் அவரது ஒலியைப் பெற்றுச்செல்லும்.

இக்கண்டுபிடிப்பைச் செய்திருப்பவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சார்ள்ஸ் ஸ்பென்ஸ் என்பவராவார்.

கைத்தொலைபேசிகளில் பேசிக்கொண்டு, வாகனங்களைச் செலுத்துவதால் - ஓட்டுபவரின் கவனம் சிதறி விபத்துக்கள் ஏற்பட்டு வருவது சாதாரணமாகிவிட்டதால், இப்புதிய கண்டுபிடிப்பு உலகிற்கு வந்திருக்கிறது.

## வியாழன் துணைக்கோளில் பெரும் பனிப்படலம்



வியாழன் கிரகத்தின் துணைக்கோள்களில் ஒன்றான 'யுரோப்பா'வில் பெரும் பனிப்படலம் உருவாகியிருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஏறத்தாழ 25 கிலோ மீற்றர்கள் தடிப்புக்கு இந்தப் பனிப்படலம் தோன்றியிருக்கிறது.

இதன்மூலம் 'யுரோப்பா'வில் நீர்வளம் இருக்கலாம் என்ற சந்தேகம் உறுதியாகியிருப்பதாகவும், இந்தத் துணைக்கோள் பனிப்படலங்களால் பல மில்லியன் ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டிருக்கலாம் எனவும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.


இதேவேளை - இந்தப் பனிப்படலம் ஒரு காலத்தில் கடற்பரப்பாக இருந்து, சூழல் குளிர்ச்சியுற்றதால் பனியாக ஒடுங்கியிருக்கலாமென்ற வியப்புக்குரிய வினாவும் விஞ்ஞானிகளிடம் எழுந்திருக்கிறது.

இதனைத் தொடர்ந்து 'யுரோப்பா'விற்கு செய்மதிகளை அனுப்பி ஆராய்வைத் தீவிரமாக்கவும் திட்டமிடப்பட்டு வருகின்றது.


இந்தப் பணியில் அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா' இறங்கி, தனது இவ்வாண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் கணிசமான நிதி ஒதுக்கீட்டைச் செய்திருக்கிறது.

இந்த ஆய்வு வெற்றியளித்தால், வியாழனின் ஏனைய துணைக்கோள்களான கனிமெட், கலிஸ்ரோ ஆகியவற்றிலும் சோதனைகள் நடத்தப்படுவதோடு, மனிதன் வாழ்வதற்கான அடிப்படைச் சூழல் அங்கு நிலவுகிறதா என்ற கேள்விகளும் இனிப்பலம் பெறலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

## டைட்டானிக் ஞாபகங்கள்



இதுதான் உலகின் பேரழிவான ஞாபகத்தைச் சுமந்துநிற்கும் டைட்டானிக் கப்பல். இந்தக் கப்பல் மூழ்கிய பின்னர் - கிடைத்த பொருட்கள் லண்டனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.




- அவற்றுள் ஒன்றுதான், இந்த ஒருசோடிக் காப்புகள். இவற்றின் பெறுமதி பல லட்சம். அதைவிட நினைவின் பெறுமதி....?



இது, டைட்டானிக் கப்பலின் அழைப்பு மணிகளில் ஒன்று. 'TITANIC' படத்தில் அடிக்கடி ஒலித்து, ரசிகர்களைக் கவர்ந்த மணியும் இதுதான்.

## ஏப்பம் விடப்படும் பாரிய மீனினங்கள்



உலகின் கடற்பரப்புக்களில் பாரிய மீன்கள் அழிக்கப்படும் பேராபத்து உருவாகிவருகின்றது.

வர்த்தக நோக்கத்திலான மீன்பிடித்தலினால் ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தால் - கடந்த 50 வருடங்களில் 90 சதவீதமான பாரிய மீன்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகச் சர்வதேசக் கடற்தொழில் சஞ்சிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வாள்மீன் (SWORD FISH), மார்லின், சுறாக்கள் உட்பட பல பாரிய மீனினங்கள் தற்போது மிக அரிதாகிவிட்டன.

இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக 'மீன் பூங்காக்களை' ஆழ்கடல்களில் நிறுவதற்குக் கனடிய கடற்சுற்றுச் சூழலியலாளர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

கடற்தொழிலாளர்களிடம் இந்தப் பிரச்சினை பற்றி வழிப்புணர்வை ஏற்படுத்தப் போவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

உலகளவில் - பிரேஸில் மற்றும் ஜப்பான் கடற்பகுதிகளில் கடந்த 15 வருடங்களில் இருபதாயிரத்திற்கும் அதிகமான 'ரியூனா' எனப்படும் பாரிய அரியவகை மீனினம் முற்றாகவே துடைத்தழிக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிடும் இவர்கள் -

இதேநிலை உலகெங்கும் நிகழ்வதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
உறுபசியும் ஓயாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்பது நாடு.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## ஆக்கிரமிப்புக்குள் உணர்வுகள்!

வலிகாமம் வடக்குப் பகுதியில், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்கள் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கும் படையினர் அவற்றை விட்டு விலகி, மீள் குடியேற்றத்திற்கு வழிசெய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இன்று - வலிகாமம் வடக்குப் பகுதி மக்களும், பொது அமைப்பினரும் ஒன்றிணைந்து - யாழ். செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தை நடாத்தவிருக்கின்றனர்.

வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக - இராணுவ நடவடிக்கைகளால் விரட்டியடிக்கப்பட்ட மக்கள் - இன்றுவரை இடம்பெயர்ந்து வாடும் அவலநிலையை நன்குணர்ந்தும், அரசாங்கம் - அவர்களை மீள்குடியமர்த்துவதற்கு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

வலிகாமம் வடக்குப் பகுதியைப் பொறுத்தவரையில்- அப்பகுதி மக்கள் வாழ்ந்துவந்த வாழ்க்கை, யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையோடு ஒப்பிடுகையில் - தன்னிறைவு கொண்டதாகவும், பொருளாதார ரீதியாக உயர்வுதரும் வளங்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.

குடாநாட்டின் இரண்டு முக்கிய தொழில்களும் - விவசாயமும், கடற்தொழிலும் சிறப்புப்பெற்று விளங்கிய பூமியது. பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளும் அதன் தொடராக மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பளை என தோட்டச் செய்கைக்கு மிகவளமான மண்வளத்தை அப்பகுதி கொண்டிருந்ததால் - ஆண்டு முழுவதுமாக பச்சைப் பசேலென அப்பகுதி முழுதும் பொங்கிப் பூரித்திருப்பதை எவரும் மறந்திடார்.

அதேபோல - மயிலிட்டி முதலாக மாதகல் வரையான கடற்பகுதி, ஆழ்கடல் மீன்பிடிக்குப் பேர்போன பிரதேசமாகும். கடற்தொழில் சீரும் சிறப்புமாக விளங்கியதால்- இப்பகுதிகளில் உடலுழைப்பால் உயர்ந்தோரே, இன்றும் ஒருவாறு தமது வாழ்நாளை நகர்த்திச் செல்வதற்கான பொருளாதார பலத்தை ஈட்டிக்கொள்ளும் தன்னம்பிக்கை மிளிர வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு - காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பலரது குடும்பங்களின் சீவனோபாயத்திற்கு உதவியாயிருந்ததோடு, குடாநாட்டின் பாரிய தொழிற்சாலையெனப் பெயர்பெற்று விளங்கியிருந்தது.

யாழ். குடாநாட்டில் இன்று வேலையற்றோர் பிரச்சினை தீவிரம் பெறுகையில், பட்டதாரிகளும் கூட வேலைக்காக அலைகையில் - ஏராளம் வேலைவாய்ப்புக்களை அள்ளி வழங்கிய சீமெந்துத் தொழிற்சாலை பற்றிய நினைவு, தவிர்க்க முடியாதபடி பலரதும் மனதை நெருடும் விடயமாகும்.

தொழில் வளங்கள்தான் இப்படி என்றில்லை - கல்வி நிறுவனங்கள் பலவும் செழித்தோங்கி - பல்லாயிரம் கற்றறிந்தோரை உருவாக்கிய பாடசாலைகள், கல்லூரிகளும் வலி. வடக்கில் கோலோச்சியே வந்தன.

பெரிய பெரிய கல்லூரிகள் என்றுமட்டுமல்ல, ஒவ்வொரு கிராமமுமே தனக்குரித்தான பாடசாலையை உருவாக்கி, அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகி- மக்களது பங்கேற்புடன் பாடசாலைகள் உருவான கதைகளை வலி.வடக்கு மக்கள் இன்றும் நினைவு கூர்வர்.

ஆன்மீகத்தைப் பொறுத்தவரையிலும் - இந்து சமயம் சார்ந்த வரலாற்றுத் தலங்களும், புகழ்பெற்ற தேவாலயங்களும் - அங்கு மக்களுக்கு சமய நம்பிக்கைகளுடன் சமூக ஒற்றுமையையும், நிம்மதியையும் பெற்றுத் தந்தன வென்றால் மிகையில்லை என்றே கூறலாம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் தேரும், கீரிமலைத் தீர்த்தமும், ஊரணி அந்தோனியார் ஆலய உற்சவமும் - தனியே அந்தந்த மக்களுக்கு மட்டுமல்ல, அப்பிரதேசத்தினதே கொண்டாட்டமாக இருந்துவந்தன.

உயிரோடும், உணர்வோடும் கலந்திருக்கும் இந்த நினைவுகளை அழிக்கமுடியாமல் - தம்மை வீடு களுக்குத் திரும்ப விடுங்கள் என்று இன்றும உரத்த குரலுடன் அப்பகுதி மக்கள் போராடுகின்றனர்.

ஆண்டுகள் கணக்கில், சொந்த மண்ணைத் தரிசிக்க முடியாமல் ஏங்கிப் போயிருக்கும் இந்த மக்களின் உள்ளங்களிலிருந்து எழும் குமுறல் இன்று உரத்த குரலாய்- சர்வதேசத்தையும் எட்டுமளவுக்கு ஒலிக்கட்டும்.

சொந்த வீடுகளுக்குத் திரும்பமுடியாமல் தடுக்கப்படும் உரிமை மீறலை, உலகம் புரிந்துகொள்ள - அனைவரும் ஒன்று திரண்டவராய் ஒருமித்து நின்று - அந்த மக்களின் துயரையும், இன்னுமின்னும் பாதுகாப்பு வலயங்களுக்குள் சிறைப்பிடிக்கப்பட்டுக் கிடக்கும் தாய்மண்ணின் ஆத்மார்த்தத்தையும் உச்சமாய் வெளிக்கொண்டு வரவேண்டும்.

ஆக்கிரமிப்பு விலகிய மண்ணில், சுதந்திரமாய் நடமாடும் அந்தநாளுக்காய் - ஒவ்வொரு தினமும் இன்னும் உரமேற்றும் நாளாகட்டும்.

# களுகங்கை ஆற்றுமுகத்தை அகலப்படுத்தும் உடனடிப் பணிகள் துரிதமாக ஆரம்பமாகின!

## களுத்துறையிலிருந்து வெள்ளத்தை வடியவைக்க நடவடிக்கை

(கொழும்பு)

களுத்துறைப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்த, களுகங்கை - கடலில் கலக்கும் ஆற்றுவாய்ப்பகுதி அகலப்படுத்தப்படுகிறது.

'வெக்ரோ' என்ற இயந்திரத்தைப் பயன்படுத்தியே ஆற்றுவாய்ப் பகுதி அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள ளப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் - களுத்துறைப் பகுதிகளைச் சூழ்ந்துள்ள வெள்ளநீரை, கடலுக்குள் செலுத்துவதற்கு முடியும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால், நீர் மட்டங்கள் உயர்வடைந்துள்ள நிலையில் - களுகங்கையிலிருந்து பெருக்கெடுத்துப் பாயும் வெள்ளப்பெருக்கினால், இதுவரை சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளன.

இதுதவிர - காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (01)

# வெள்ளம் பாதித்த மக்களுக்குதவ இந்தியக் கப்பல் காலி வருகிறது!

(கொழும்பு)

தென்னிலங்கை மற்றும் மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில், தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தென்பகுதி மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்காக, இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று, இந்தியக் கடற்படைக் கப்பலான 'ஐ.என்.எஸ். சுயாத்தா' காலித் துறைமுகத்திற்கு வருகிறது.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக அனுப்பப்பட்டுள்ள இக்கப்பலில் 9 உயிர்காப்புப் படகுகளும், அதற்கான 9 இயந்திரங்களும், இரு உலங்கு வானூர்திகளும் மற்றும் மருந்துப பொருட்கள் என்பனவும் கொண்டுவரப்படுகின்றன.

அத்துடன், இரு வைத்தியர்கள் உட்பட 30 பணியாளர்களையும் கொண்ட இக்கப்பல், இன்று காலித் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## முன்னணிக் காவலரண்களிலிருந்து 600 மீற்றருக்கப்பால்

# பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே மக்கள் தோட்டம் செய்யலாமாம்!

## படையினர் அனுமதிப்பதாக மனித உரிமை ஆணைக்குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்தை அண்டிய இராணுவ முன்னணிக் காவலரண்கள் அமைந்துள்ள பகுதியிலிருந்து, 600 மீற்றருக்கு வெளியே, குறிப்பிட்ட சில பகுதிகளில் தோட்டம் செய்வதற்கு மக்களுக்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளதாக - மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இராணுவம் முன்னரும் இவ்வாறு அனுமதித்திருப்பதாகக் கூறப்பட்டாலும் - அப்போது பலதடவைகள் இவ்வாறு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பொதுமக்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டு வந்தனர்.

குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இவ்விதம் பல தடவைகள அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவங்கள் தொடர்பாக, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, சம்பவ இடங்களுக்குச் சென்று விசாரணைகளை நடாத்திய - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் - 511, 515 பிரிகேட் இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், அப்பகுதி இராணுவக் காவலரண்களில் பணியாற்றும் இராணுவத்தினர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோரை அழைத்துக் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தினர்.

இதன்படி, அப்பகுதிகளில் ஏற்கனவே பலவருடங்களாக தோட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட மக்கள் - தொடர்ந்தும் தோட்டம் செய்யலாம் என்றும்,

அப்பகுதியைச் சேர்ந்த - இடம்யெர்ந்து வேறு பகுதிகளில் வாழ்ந்து வருபவர்கள் - இங்கு வந்து குடியமரவோ, தோட்டம் செய்யவோ, புதிதாக பற்றைகளை வெட்டி தோட்டம் செய்யவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் முடிவுகள் எட்டப்பட்டதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (சு,ரா)

## தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவதற்காக

# தண்ணீர் இறைத்த சிறுவன் கிணற்றுள் வீழ்ந்து மரணம்!

தோட்டத்திற்கு தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவர், தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் மானிப்பாயில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில், தோரான்தோட்டை, மானிப்பாயைச் சேர்ந்த மகேந்திரம் அஜந்தன் (வயது 15) எனும் சிறுவனே உயிரிழந்தவராவார்.

தோட்டத்திற்கு தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த சமயம், தவறுதலாக மேற்படி சிறுவன் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார். தோட்டத்தில் நின்ற சிறுவனைக் காணாத உறவினர்கள் தேடித்திரிந்தபோதே, சிறுவன் இறந்த நிலையில், கிணற்றுக்குள் வீழ்ந்து கிடக்கக் காணப்பட்டார்.

பின்னர், சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சு)

## வெள்ளப்பெருக்கில் உயிரிழந்தோர்

# மாத்தளையில் 27 சடலங்கள் இதுவரையில் மீட்கப்பட்டன!

(கொழும்பு)

மாத்தளை வெனிலயாப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக உயிரிழந்தவர்களில், இதுவரை 27 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் 65 பேர் காணாமற் போயுள்ளனர்.

இதேவேளை - வெனிலயாப் பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அப்பகுதியிலுள்ள மக்களை இடம்பெயருமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவசர உதவி வழங்கும் பணிக்காக நான்கு ஹெலிகள் தயார் நிலையிலும் வைக்கப்பட்டுள்ளன. (01)

## கல்வியமைச்சில் நேற்று உயர்மட்ட மாநாடு

# ஒத்திவைக்கப்பட்ட உயர்தரப் பரீட்சை 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறும்

நேற்றும் இன்றும் நடைபெறுவதாக இருந்து, பரீட்சைத் திணைக்களத்தினால் ஒத்திவைக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள், முறையே - எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாகவே - நேற்றையதினமும், இன்றையதினமும் நடைபெறவிருந்த பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இது தொடர்பாக நடைபெற்ற கல்வியமைச்சின் உயர் மட்டச் சந்திப்பிலேயே, புதிய திகதிகள் பற்றிய முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன்படி, நேற்றைய தினம் நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமையும்,

இன்றையதினம் நடைபெறவிருந்த பரீட்சைகள் - எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, பரீட்சை வினாத்தாள்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டிருப்பதால், அதனை உரியமுறையில் பாதுகாக்குமாறு வலயத்திணைக்கள அதிகாரிகளுக்குப் பரீட்சைத் திணைக்களம் பணித்துள்ளது.

அத்துடன், பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் யாவும் திட்டமிட்டபடி நாளை 21 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (01,சு,ரா)

# சர்வதேச சந்தை விஸ்தரிப்புக்கல்ல; மக்களின் அவலங்களைப் போக்குவதே உண்மையான அதிகாரப் பரவலாக்கம்!

## சுயநிர்ணயம் ஒரு பார்வை பகுதி-34

**வேலும்மயிலும் சேந்தன்**

விரைவான பொருளாதார மேம்பாட்டினைக் கருத்தில் எடுத்து ஒற்றையாட்சி முறையிலான நிர்வாகக் கட்டமைப்பினை இந்தியா கொண்டிருப்பதற்கு, அதன் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு இந்திய அரசியற்திட்டம் வழங்கியிருக்கும் அதிகாரங்களும், அந்த ஆணைக்குழு சுதந்திரமாக இயங்கும் தன்மையுமே காரணம் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டுடன் நீதிச்சேவை ஆணைக்குழுவின் சுதந்திரமான செயற்பாடும் ஒத்திசைவாகக் காணப்படுகின்றதனை Nadkarni என்ற சமஷ்டி அறிஞர் ஒப்பீட்டாய்வு செய்துள்ளதை நாம் அவதானிக்கலாம்.



இந்தியாவின் சமஷ்டிமுறையில் பிராந்திய நிர்வாகங்களை எடுத்துக்கொண்டால்- அரசியற்திட்ட ரீதியாகக் காஷ்மீருக்கும், மேற்குவங்க மாநிலத்திற்கும் கூடுதலான நிர்வாக அதிகாரங்கள் காணப்படுகின்றன. இருந்தபோதும், காஷ்மீரின் பிரிவினைவாதப் போராட்டம் காரணமாக இந்தியா கூடுதலான நிர்வாக அதிகாரங்களைத் தற்பொழுது கொடுக்க முன்நிற்கவில்லை. ஏனைய மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்களையும்விட காஷ்மீருக்கு அதிகாரங்கள் குறைவாக இருக்கின்றது என்று அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர். ஆனால், மேற்குவங்க மாநிலம் கூடுதலான நிறுவனமயப்பட்ட நிர்வாக அதிகாரங்களை கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் பிராந்தியங்களை அல்லது மாநிலங்களை அல்லது யூனியன் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் அதன் எல்லைகளை வரையறுப்பதில் மிகவும் நெகிழ்வுத் தன்மையைப் பேணுவதற்கு இந்தியா அண்மைக்காலங்களில் முயன்றுவருகின்றது. இந்த அடிப்படையிலே உத்தரப் பிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும் புதிய மாநில அரசாங்கங்களை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு மாநிலங்கள் புதிதாக உருவாக்கினாலோ அல்லது மீளுருவாக்கம் செய்தாலோ நான்கு விடயங்களில் மிகவும் சிரத்தை செலுத்தி அவதானிக்க வேண்டும் என இந்திய அரசியற்திட்டம் வரையறுத்துள்ளது.

அவையாவன -

◆ எந்தவொரு மாநில உருவாக்கமும் இந்திய தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையக் கூடாது.

◆ அவ்வாறு பிரிக்கப்படும்போது மொழி, இன, கலாசார பன்மைத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்

◆ அபிவிருத்திக்கு உதவக்கூடிய வகையில் மாநில, பிரதேச உருவாக்கம் அமையவேண்டும்.

◆ நிதி, பொருளாதார, முகாமைததுவம் சிறப்பாக அமையக்கூடியதாக அமையவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் இந்தியாவின் சமஷ்டிமுறையை ஆய்வு செய்த அரசியல் திட்டவாளர்கள் - இந்தியாவின் சமஷ்டி மூன்று கட்டுமானங்களில் (Paradigms) தங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதாவது - நிர்வாகக் கட்டுமானம், ஜனநாயகக் கட்டுமானம், இனங்களுக்கிடையிலான சமூக ஒப்பந்தக் கட்டுமானம் என மூன்றாக அவற்றை வகுக்கின்றனர்.

இதில் நிர்வாகக் கட்டுமானத்தினைப் பற்றி இக்கட்டுரையின் ஆரம்பத்தில் பார்க்கப்பட்டுள்ளது. ஜனநாயகக் கட்டுமானத்தினை நோக்குவோமாயின் - பல கட்சிகள் தமது அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதனை இந்த ஆய்வாளர்கள் இந்தியாவின் ஜனநாயகக் கட்டுமானத்தின் வலுவான அம்சமாகக் கருதுகின்றனர்.

அதாவது, இன்று இந்தியக் கட்சி முறைகள்- தேசியக்கட்சி, மாநிலக்கட்சி என அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் காணப்படுகின்றபோதும், அதற்கு மேலாக ஒரு தேசியக்கட்சி ஆட்சி அமைவதற்குப் பதிலாகப் பல மாநிலங்களின் கூட்டரசாங்கம் ஆட்சியில் அமர்வது இந்திய சமஷ்டிக்கு வலுவானதொரு அம்சமாகக் கருதுகின்றனர்.

மாநிலங்களின் கட்சிகள் ஒரு பொது இணக்கப்பாட்டின் அடிப்படையின மத்தியில் கூட்டரசாங்கத்தினை உருவாக்குவது இந்திய சமஷ்டி ஆட்சிமுறைக்கு இந்தியாவின் ஜனநாயகக் கட்டுமானத்தின் மூலம் கிடைத்த நன்மையெனக் கருதப்படுகின்றது.

அதேவேளை, பொதுவாக இந்தியாவின் ஜனநாயக ஆட்சி முறைமை- இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் சில அதிர்வுகளையும், நெருக்கடிகளையும் சந்தித்துள்ளதாக இந்திய சமஷ்டி ஆய்வாளர்கள் தற்பொழுது எடுத்துரைத்து வருகின்றனர். இது மேலதிகமான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

அடுத்து இனங்களுக்கிடையிலான சமூக ஒப்பந்தக் கட்டுமானம் என அண்மைக்கால ஆய்வாளர்கள் கருதுவது - இந்தியாவிலிருக்கும் இனங்கள் தங்களுக்கிடையே கொண்டும், கொடுத்தும் - ஒன்றில் மற்றொன்று தங்கியிருக்கும் தன்மையேயாகும். ஆனால், இவ்விடயத்திலும் அண்மைக்கால இந்து - முஸ்லிம் அதிர்வுகள் கருத்தில் எடுக்கப்படாதது இங்கு அவதானத்திற்குரிய விடயமாகும்.

இந்திய அரசியல் திட்டத்தினை ஆய்வுசெய்யும் தற்கால அரசியல் திட்ட மாணவர்கள் அல்லது ஆய்வாளர்கள் இந்திய அரசியல் திட்டம், அந்நாட்டு மக்களின் நல்லாட்சிக்கு (Good Goverance) உதவுகின்றதா? அம்மக்களுக்கான நல்லாட்சியை உறுதிசெய்வதற்கான சட்ட வரையறைகளைக் கொண்டிருக்கின்றதா? அவ்வாறு கொண்டிருந்தாலும், அந்தச் சட்ட வரையறைகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துகின்றதா? என்பவற்றினைக் கூர்ந்து அவதானிக்கின்றனர்.

இந்திய அரசியல் திட்டத்தின் பிரகாரம் மூன்று பட்டியல்கள் மூலம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் பகிரப்படுகின்றன.

மத்திய அரசின் பட்டியலின் மூலம், மத்திய அரசு 96 முக்கிய விடயங்களில் தனது அதிகாரத்தினை வைத்திருக்கின்றது. இவற்றில் முக்கியமாக நிதியியல், பாதுகாப்பு, வெளியுறவு, வரிகள் என்பவை உள்ளடங்கும்.

மாநில அரசுகளின் பட்டியல் மூலம் 65 விடயங்களிலேயே மாநிலங்களுக்கு அதிகாரங்கள் இருக்கின்றன. உள்ளூராட்சி, சமுகநல னோன்பு, உயர் நீதிமன்றம் நீங்கலான நீதி நடவடிக்கைகள் இந்திய மாநிலங்களுக்கான பட்டியலில் உள்ளடங்குகின்றன.

மூன்றாவது பட்டியலாக மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் பொதுவான பட்டியல் என 47 விடயங்கள், அதிகாரங்கள் பகிரப்படாமல் இருக்கின்றன.

இரண்டு அரசுகளுக்கிடையிலும் பகிரப்படாமல் தெளிவில்லாத வகையிலிருக்கும் இந்த மூன்றாவது பட்டியல் (Concurrent list) இந்திய மக்களின் நல்லாட்சிக்கு ஒரு தடைக்கல்லாக அமைவதாகத் தற்கால ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஏனெனில், இவ்வாறான தெளிவில்லாத அதிகாரப் பகிர்வுத் தன்மையானது நடைமுறையில் காலதாமதங்களை ஏற்படுத்துவதுடன், பொறுப்பாட்சியில் (Accountability) இருந்தும் இரு அரசுகளையும் விலக்கி விடும் அபாயம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனைவிடவும், இவ்வாறான தெளிவில்லாத அதிகாரப்பகிர்வு முறைமை மத்திய அரசிற்கே கூடுதலான அதிகாரங்களைத் தன்வசப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் எனவும் ஆய்வாளர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசியலின் ஓட்டங்களை அவதானிக்கும் அரசியல் ஆய்வாளர்கள், அவ்வாறான இந்திய அரசியல் கலாசாரத்திற்கு ஒத்திசைவாக இயங்கும் அரசியற் திட்டத்தினையும் தற்போது ஒப்பீட்டாய்வு செய்து வருகின்றனர்.

இந்தவகையில், இந்திய அரசியற்திட்டத்தின் சமஷ்டிமுறையை ஆய்வுசெய்த யாழ்ப்பாணத்து ஆய்வாளரான வாசுகி நேசையா - நடுவினில் உள்முற்றமும், நான்கு புறமும் கூரைகளைக் கொண்ட யாழ்ப்பாணத்து நாற்சார வீடுகளின் கட்டமைப்பினை இந்திய மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான கட்டமைப்புடன் ஒப்பீடு செய்கின்றார்.

அவ்வாறு அவர் ஒப்பீடு செய்தபோதும், இந்திய அரசியலில் அண்மைக் காலத்தில் தீவிரமாக வளர்ந்து வரும் மத அடிப்படைவாதம் தனது ஒப்பீட்டிற்கு மிகவும் பாதகமான ஒரு விடயமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்திய அரசியற்திட்டத்தின் அதிகாரப்பகிர்வுமுறை- இன்று உலகளாவியரீதியில் பரந்து வியாபித்து வரும் சந்தை விஸ்தரிப்பு வாதமாகிய உலகமயமாதலை எதிர்கொள்வதற்குப் பல சாதகமான கட்டமைப்புக்களைத் தன்வசம் வைத்திருப்பதாக மேற்படி ஆய்வாளர் கருதுகின்றார்.

இந்த ஆய்வுகளைத் தொகுத்து நோக்கும்போது, இந்திய சமஷ்டியை மட்டுமல்ல இன்று எந்தவொரு அரசியற்திட்டத்திலும் சமஷ்டி, ஒற்றையாட்சி என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் நல்லாட்சியை (Good Goverance) உறுதிசெய்வதுதான் நோக்கம் எனக்கருதி, அதிகாரப் பகிர்வு இன்று உலகளாவியரீதியில் வேண்டப்படுவதாக அமைந்துள்ளது.

உலகின் எந்தப் பகுதியிலும், எந்த நாட்டிலும் சந்தைச் சக்திகளைச செயற்படுத்துவதற்குச் சுதந்திரமான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இன்றைய உலகநாயகர்களான தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளது நோக்கமும், தேவையுமாகும்.

இதனால், இன்று அதிகாரப்பகிர்வு முறைமையை வேண்டிநிற்கும் மக்கள் - தமக்கேயுரித்தான தங்களது இறைமையை உறுதிசெய்யும் வகையில் அதிகாரப்பகிர்வினைப் பெற்றெடுக்க வேண்டுமே தவிர, தேசிய எல்லைக்கள் கடந்த கம்பனிகளது வியாபார விஸ்தரிப்பிற்காகக் கட்டமைப்புகளை நிறுவுவதுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது என்பதே இன்றைய மூன்றாம மண்டல நாடுகளின் அரசியல் ஆய்வாளர்களின் ஆதங்கமாகும். (முற்றும்)

# மனிதனைத் தாக்கும் புற்றுநோயும் அதற்கான காப்பு முறைகளும்

## மருத்துவ அரங்கு

**எஸ். சிவசக்தி**
4 ஆம் வருட மருத்துவ பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

யாழ்.மாவட்டத்தினைப் பொறுதத வரையில் நோயாளிகளின் இறப்பு வீதத்தினை அதிகரிக்கின்ற நோய்களுள் புற்றுநோயும் ஒன்றாகும். புற்றுநோயானது மனித உடற்கலகங்கள் கட்டுப்பாடற்றமுறையில் பெருகுவதனால் ஏற்படுகின்றது.

கலங்களின் பிரிவானது கலத்தின் கருவிலுள்ள நிறமூர்த்தங்களினால் தீர்மானிப்படுகின்றது. புற்றுநோயானது, கலங்கள் பெருகுவதனைத் தடுக்கின்ற நிறமூர்த்தங்களின் தொழிற்பாடு இல்லாது போகின்றதனாலும், மேலும் கலங்கள் பெருகுவதனை அதிகரிக்கின்ற நிறமூர்த்தங்களின் செயற்பாடு கூடுவதனாலும் ஏற்படுகின்றது.

இச்செயற்பாட்டை - பள்ளத்தினை நோக்கி ஓடும் ஒரு வாகனத்திற்கு ஒப்பிடலாம். பள்ளத்தினை நோக்கி ஓடும் ஒரு வானத்திற்கு ஒரு ஆர்முடுகல் விசை பிரயோகிக்கப்பட்டால், அதன் வேகம் அதிகமாகி, அது கட்டுபாட்டை இழக்கும். அதேபோன்று, அமர்முடுகல் விசை இல்லாது இருப்பினும் அதனை நிறுத்த முடியாது. அதுபோல், புற்று நோய்க் கலங்கள் கட்டுபாட்டை இழந்து பெருகின்றன.

மனிதனின் ஆரோக்கியமான உடற்கலத்தின் நிறமூர்த்தத்தில் ஏற்படும் மாற்றமானது அதன் அயலிலும் பரவுகின்றது. பின்னர் அந்த அசாதாரண கலங்கள் நிணநீரினால் மனிதனின் உடலின் ஏனையபகுதிகளையும் சென்றடைகின்றன.

புற்றுநோயினை அதிகரிக்கச் செய்யும் காரணிகளாக - மனிதனின் உணவுப்பழக்கம், நுண்ணங்கித் தொற்று, சூழற்காரணிகள், புகைத்தல், மது அருந்துதல் ஆகியன அமைகின்றன.

நாம் இப்போது உணவுப்பழக்கத்தினை எடுத்து நோக்குவோமானாயின், அதிக புரதச்சத்து, கொழுப்புச் சத்து நிறைந்த உணவானது புற்றுநோயை ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக, மாட்டு இறைச்சி அதிகளவில் உட்கொள்வதானால் மார்பு, குடற் புற்றுநோய் ஏற்படுகின்றது. இதனைவிட அதிகளவில் உப்பிட்ட கருவாடு, தகரத்தில் அடைத்த உணவுகள், பாண்டலடைந்த எண்ணெய்த்தன்மையான உணவுகள், பூகையூட்டப்பட்ட உணவுகள் என்பவையும் புற்றுநோயை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது.

இதனைவிட விற்றமின்கள், கனியுப்பு குறைபாட்டினாலும் புற்றுநோய் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக - விற்றமின் A குறைபாட்டினால் நுரையீரல் புற்றுநோயும், விற்றமின் C குறைபாட்டினால்



**மருத்துவ அரங்கு**

இரைப்பைப் புற்றுநோயும், அயடீன் குறைபாட்டினால் தைரொயிட் புற்றுநோயும், இரும்புச் சத்துக் குறைபாட்டினால் களத்தில் புற்றுநோயும் ஏற்படுகின்றது. அதிக உடற்பருமன் உள்ளோரிலும் குடற் புற்றுநோய் ஏற்படுகின்றது.

அதிக நார்ச்சத்து நிறைந்த உணவுகளை எமது அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமும் புற்றுநோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஒரு நாளில் 400 g மரக்கறி, பழவகை நிறைந்த உணவுகளை எமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதிகளவு மதுபாவனையானது சமூக பொருளாதாரத்தில் சீரழிவை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, உடலுக்கு நஞ்சுப் பதார்த்தமாகவும் தொழிற்படுகின்றது. அதிகளவு மது பாவனையால் வாய், தொண்டை, களம், குரல்வளை, ஈரல் ஆகியவற்றில் புற்றுநோய் ஏற்படுகின்றது. அதிகளவு தேநீர், கோப்பி, சொக்லேட் உணவுகள் என்பனவும் புற்றுநோயை ஏற்படுத்துகின்றது.

தற்போது நுண்ணங்கிகளின் தாக்கத்தினால் ஏற்படும் புற்றுநோயை எடுத்து நோக்குவோமாயின் - Hepatitis B வைரசு, Helicobactor Pylon எனும் பற்றீரியா, HIV (எயிட்ஸ நோயை ஏற்படுத்தும் வைரஸ்), EBV எனப்படும் வைரஸ் என்பன புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. Hepatitis B வைரசு - ஈரல் புற்றுநோயையும், Helicobactor Pylon - இரைப்பைப் புற்றுநோயையும் ஏற்படுத்துகின்றன. மேலும் அதிகளவு சூரிய ஒளியானது தோல் புற்றுநோயையும், பலரோடு பாலியல் தொடர்கள் இருப்பதனால் கருப்பைப் புற்றுநோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோயும் ஏற்படுகின்றது.

அடுத்து புற்றுநோயினால் ஏற்படும் தாக்கத்தினையும், புற்றுநோயிலிருந்து காப்பதற்கான முறைகளையும் எடுத்து நோக்குவோமாயின் - புற்றுநோயின் தாக்கத்தினைக் குறைப்பதில் வருமுன் காத்தல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நோய்க்கான அறிகுறி உள்ளோரை நோயின் ஆரம்பபருவத்தில் இனங்கண்டு, சிகிச்சையளிப்பதனால் மார்பு, கருப்பை, வாய், குரல்வளை, பெருங்குடல், குதம், தோல் என்பனவற்றில் ஏற்படும் புற்றுநோயை முற்றாகக் குணமடையச் செய்யலாம்.

(தொடரும்)

# 'ஆக்' மாநில போராளிகளுக்கெதிராக இந்தோனேஷியா படை நடவடிக்கை!



'ஆக்' மாநில போராளிகளுக்கு எதிராக, இந்தோனேஷிய இராணுவம் படை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுகர்ண புத்திரி, 'ஆக்' மாகாணத்தில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார்.

மாகாணத்தின் தலைநகர் பண்டானிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுதந்திர 'ஆக்' இயக்கத்தின் பாரியமுகாம் மீது இந்தோனேஷிய போர் விமானங்கள் ரொக்கெட் தாக்குதல் நடத்தி வருகின்றன. அதேசமயம், இப்பகுதியில் பரசூட் மூலம் இந்தோனேஷிய இராணுவத்தினர் தரையிறக்கப்பட்டு வருகின்றனர்.

'ஆக்' மாநில சுதந்திரத்திற்காகப் போராடும் போராளிகளுக்கும் இந்தோனேஷியப் படைகளுக்குமிடையே கடந்த 26 வருடங்களாக நடைபெற்ற போரில் - இதுவரை 10 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

எனினும், கடந்த டிசெம்பரில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து - ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வந்தன. பேச்சுக்களில் 'ஆக்' போராளிகள் தமது சுதந்திரப் பிரகடனத்தை கைவிட மறுத்ததையடுத்து பேச்சுகள் முறிவடைந்துள்ளன.

ஆக் மேற்கு புறத்தில் உள்ள விமானத்தளம் ஒன்றில் 500 இந்தோனேஷியப் படையினர் தரையிறங்கியுள்ள அதேசமயம், போராளிகள் அதிகமாகவுள்ள வடபுற நகரான லோகோ சுமாவேயை நோக்கி 15 இந்தோனேஷியப் போர்க் கப்பல்கள் விரைந்துள்ளன.

நாம் எமது சுதந்திரப் பிரகடனத்தைக் கைவிடமுடியாது. அதற்காக போராடத் தயாராகிவிட்டோம் என 'ஆக' போராளி அமைப்பின் தலைவர் மஹ்மூட் மாலிக் கூறியுள்ளார்.



இந்தோனேஷியாவின் பொலிஸ் அதிரடிப் படையினர், ஹெலிக்கொப்ரரில் தொங்கியவாறு, ஜகார்த்தா பொலிஸ் தலைமையகத்தில், பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.



'எமது நாடு விற்பனைக்கு இல்லை' என்று கோஷமெழுப்பியவாறு பக்தாத்தில் நேற்று நடைபெற்ற பேரணிக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் ஈராக்கியப் பாதுகாப்புப் பணியாளர்.

## 4 சந்தேகநபர்கள் சவூதியில் கைது!

சவூதி அரேபியா ரியாட் நகரில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் சம்பந்தப்பட்டதான சந்தேகத்தின்பேரில், நால்வர் சவூதிப் பொலீஸாரால் கைதாகியுள்ளனர்.

இதேசமயம், அல்-கொய்டா அமைப்பு - தொடர்ந்து தீவிரமாகச் செயற்பட்டுவருவதால், எதிர்வரும் வாரங்களில் மேலும் இத்தகைய தாக்குதல்கள் தொடரலாம் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. இத்தகைய தாக்குதல்களுக்கு ஒஸாமா பின்லேடன் பல மாதங்களுக்கு முன்பே திட்டமிட்டிருக்கலாம் என ரியாட்டிலுள்ள அமெரிக்கப் புலனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

## இரு ஐ.நா. அமைதிப் படையினர் கொங்கோவில் காணமற்போயினர்

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில், இறுதியாக இரண்டு ஐ.நா. அமைதிகாப்புப் பார்வையாளர்கள் காணாமற்போயுள்ளனர். நைஜீரியா மற்றும் ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த ஐ.நா. பாதுகாப்புப்படை வீரர்களே காணாமற்போயுள்ளனர்.

கொங்கோவில் அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உகண்டாப் படைகள் - அங்கிருந்து வாபஸ்பெற்றுச் சென்றபின்னர், பல்வேறு இனக்குழுப் போராளிகளிடையே கடும் போர் வெடித்துள்ளது. இதனால், பலர் இறந்தும், ஏராளமானோர் இடம்பெயர்ந்தும் வருகின்றனர்.

## ஆறு முஸ்லிம்கள் காஷ்மீரில் கொலை!

(காஷ்மீர்)

காஷ்மீரில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் - ஆறு முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்கள், காஷ்மீர் கிராமமொன்றின் தலைவரின் குடும்ப அங்கத்தினராவர். ராஜுரி மாவட்டத்தின் மிகப் பின்தங்கிய கிராமத்திலுள்ள, கிராமத் தலைவரின் வீட்டினுள் நுழைந்த ஆயுதபாணிகள் - அவரின் மனைவி, மருமகன்மார் மூவர், இரண்டு குழந்தைகள் ஆகியோரைச் சுட்டுக்கொன்றனர். சம்பவம் நடைபெற்றபோது, கிராமத்தலைவர் அங்கிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட மூன்று பெண்களின் கணவர்களும், இந்திய இராணுவம் மற்றும் பொலிஸில் பணியாற்றுகின்றனர். படையினரின் குடும்பங்களை அழிக்கும் காஷ்மீர் போராளிகளின் ஒரு நடவடிக்கையே இது என இந்திய அரச தரப்பில் கூறப்படுகிறது.

## யூரோவின் பெறுமதி ஏறி வருகிறது

ஐரோப்பாவின் ஒரே நாணயமாக விளங்கும் யூரோவின் பெறுமதி, நான்கு வருடங்களில் பிரமிக்கத்தக்க வகையில் அமெரிக்க டொலரின் பெறுமதியையும் தாண்டிச் சென்றுள்ளது. நான்கு வருடங்களுக்கு முன் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டபோது - அமெரிக்க டொலருக்கு எதிராக இதன் பெறுமதி 1.17 டொலராகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க டொலர் அலைபாய ஆரம்பித்துவிட்டதாக, அமெரிக்கத் திறைசேரித் தலைவர் ஜோன்ஸ்ரோ கிண்டலடித்துள்ளார். யூரோவுக்கு எதிரான டொலரின் பெறுமதி - இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து 8 வீதமாகக் குறைந்ததுடன் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது.

## அரபாத் மீது இஸ்ரேல் அழுத்தம் பிரயோகம்



பலியான இஸ்ரேலியரின் இறுதிச் சடங்கு.

இஸ்ரேல் மீது அண்மையில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல்களில், ஒன்பது இஸ்ரேலியர்கள் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து - பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் மீது இஸ்ரேல் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது.

அரபாத்தை சந்திக்க விரும்பும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரசியல்வாதிகள், இஸ்ரேலிய அதிகாரிகளை வந்து சந்திக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், தனது நாட்டுடனான மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளின் எல்லைகளையும் இஸ்ரேல் மூடியுள்ளது.

திங்களன்று சைக்கிளில் வந்த தற்கொலைப் படையாளி ஒருவர், காஸாப் பகுதியில் இராணுவ ரோந்து அணி அருகே குண்டை வெடிக்க வைத்ததில் மூன்று படையினர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

## 'சார்ஸ்' நோய்த் தாக்கம் சீனாவில் தொடர்கிறது



தற்காப்பு முகமூடியுடன் காலைப் பயிற்சியில் சீன ஆரம்பப் பள்ளி மாணவர்கள்.

'சார்ஸ்' நோயின் தார்க்கம், சீனாவில் இன்னும் குறைந்தபாடில்லை. சீனாவில் மேலும் 12 'சார்ஸ்' நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அதேசமயம், ஹொங்கொங்கில் நான்கு நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஜெனீவாவில் நடைபெறும் 'சார்ஸ்' தாக்கத்திற்குள்ளான 16 நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட தொற்றுநோயியல் நிபுணர்கள் - தற்போது 'சார்ஸ்' உலகம் முழுவதும் ஏறத்தாழக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், சீனாவில் மட்டும் அது கட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஐரோப்பிய யூனியனுக்கு தனி அமைதிகாப்புப் படை!

(பாரிஸ்)

ஐரோப்பிய ஒன்றியம் - அமைதிகாப்புப் படைக்கென 60 ஆயிரம் படையினரைக் கொண்ட விரைவுப் படையணி ஒன்றை அமைக்கவுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை, ஒன்றியப் பாதுகாப்பு அமைச்சர்கள் இணைந்து வெளியிடவுள்ளனர். எனினும், இப்படையில் சில முக்கிய இராணுவ ரீதியான குறைபாடுகள் இருக்கலாம் என அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

முன்னதாக - இவ்வருட ஆரம்பத்தில் ஐரோப்பிய ஒன்றியம், மசிடோனியாவுக்கு தனது சிறிய அளவிலான அமைதிகாப்புப் படையை அனுப்பிவைத்தது. பொஸ்னியாவிலும், ஐ.நா பொலிஸாருக்குப் பதிலாக, ஐரோப்பிய ஒன்றிய அமைதிப்படையினர் நிறுத்தப்பட்டனர்.

எனினும், கடந்த சில மாதங்களாக ஐரோப்பிய பாதுகாப்புத் திட்டம் தொடர்பான சர்ச்சைகள், ஒன்றியத்தினுள் நிலவிவந்தது. நேட்டோவிற்கு மேலதிகமாக ஐரோப்பாவுக்கெனத் தனியான இராணுவத் தலைமையகம் தேவையென ஈராக் போரிற்குப் பின்னர் பிரான்ஸும், ஜேர்மனியும் வலியுறுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய யூனியன் அமைதிப்படை.



எனினும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான அமைதிப் படை உருவாக்கலில் நாம் ஓரளவு வெற்றிகண்டு வருகிறோம் என ஒன்றிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிவாரண அரிசிக் கொள்வனவு; செயலகத்திற்கு எதிராக வழக்கு!

யாழ். மாவட்டத்துக்கான நிவாரண விநியோகத்துக்குத் தேவையான அரிசியை உள்ளூரில் கொள்வனவு செய்வதற்கு யாழ். செயலகத்தினால் எடுக்கப்பட்ட முடிவு தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உலருணவு நிவாரண விநியோகத்துக்குத் தேவையான அரிசியை உள்ளூரில் கொள்வனவு செய்வது என்று அண்மையில் யாழ். செயலகம் முடிவு செய்திருந்தது.

இம்முடிவின் அடிப்படையில், தேவையான அரிசியை வழங்கும் வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்கும் யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்திருந்தது. வழமையான கேள்விப்பத்திரம் கோரும் முறை மூலமாக மேற்படி அரிசி வழங்குநர்களைத் தாம் தெரிவுசெய்ததாக யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், இத்தெரிவு தொடர்பாகவே யாழ். செயலகத்துக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதம் இருபத்து மூன்றாம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இவ்வழக்கில் பிரதிவாதிகளாக யாழ். அரசாங்க அதிபரும், யாழ். செயலக திட்டப்பணிப்பாளரும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். (க,லி)

# பிரதமருடன் ஹெல்கிசன் நேற்று சந்தித்துப் பேச்சு

நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் சம்பந்தமாகவும், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு தொடர்பாகவும் விதார் ஹெல்கிசன் பிரதமருடன் பேச்சுநடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றிரவு நடைபெற்ற பேச்சுக்களின் போது, விதார் ஹெல்கிசனுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவரும், அமைச்சரின் செயலாளரும் உடனிருந்தனர்.

இப்பேச்சுக்களை நிறைவு செய்துகொண்ட பின்னர், விதார் ஹெல்கிசன் நோர்வே திரும்பியதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (200)

# வெள்ள அகதிகளுக்கு நோர்வே அரசும் உதவி

## ஹெல்கிசன் உறுதியளிப்பு

கடந்த சில தினங்களாகப் பெய்த அடைமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய நோர்வே அரசு முன்வந்துள்ளது.

வெள்ளத்தாலும், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 9 கோடி 50 லட்சம் ரூபாவை நோர்வே அரசு வழங்கியுள்ளது.

நேற்று அலரி மாளிகையில் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், மேலும் பல நன்கொடைகளை வழங்கப் போவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவரும் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

# வறுமைக் குடும்பங்கள் விபரம் உலகவங்கி அதிகாரி சேகரிப்பு

யாழ்ப்பாணத்தில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் தொடர்பாக உலகவங்கி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

மேற்படி ஆய்வு முயற்சி தொடர்பாக, உலகவங்கி அதிகாரிகள் ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக தெற்காசியாவுக்கான போருக்குப் பின்னான முரண்பாடுகளைக் களைவதற்குப் பொறுப்பான உலகவங்கியின் உயரதிகாரி ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் வறுமைநிலை தொடர்பாகவும், இவற்றை அகற்றுவதற்கு - அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தகவல்களைத் திரட்டிக்கொள்வதில் மேற்படி உலக வங்கி அதிகாரி ஆர்வம் காட்டினார்.

நேற்றுமாலை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மேலும், அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களிற்கும் ஏற்கனவே மீளக்குடியமர்ந்த மக்களுக்குமிடையில் உள்ள வாழ்வியல் முரண்பாடுகள் தொடர்பாகவும் மேற்படி சந்திப்பில் ஆராயப்பட்டது. (க)

## கனேடிய தூதுவர் கிழக்கிற்கு

(திருகோணமலை)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் திருமதி வேலாரி ரேமண்ட் நேற்று ஆறுநாள் கிழக்கு விஜயமாக திருகோணமலைக்குச் சென்றுள்ளார். தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்யவுள்ளார்.

## இரத்தினபுரியில் ஒரு லட்சம் அகதிகள்

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், ஒரு லடசத்து 25 ஆயிரம் பேர் அகதிகளாக இருக்கின்றனர் என்று, சமூக சேவை அமைப்பு கூறுகின்றது.

# இலங்கைக்கு உதவியளிக்க நெதர்லாந்து முன்வருகை

## தூதுவர் - அமைச்சர் சந்திப்பு

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவருக்கும், அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, நெதர்லாந்துத் தூதுவர் திருமதி சகான் பிளாங்கோட் இலங்கையில் நிலவும் வறுமை நிலையை ஒழிப்பதற்கும், இலங்கையில் மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், இலங்கையிலுள்ள பொது அமைப்புக்களுக்கு நெதர்லாந்து உதவி வழங்குவதற்கும் நெதர்லாந்து அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்ததுடன், கடந்த வருடமும், இதேபோல் இலங்கைக்கு 100 மில்லியன் யூரோவை நெதர்லாந்து வழங்கியுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது - வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரவி கருணாநாயக்க- இலங்கையில் தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், வர்த்தக முதலீடுகள் முன்னேற்றமடைந்துள்ளதாகவும், இதனால் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்த நிலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார். (01)

## அரசு - புலிகள் புரிந்துணர்வு

# ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய மனு; அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடைளிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை, ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை பிரதிவாதியாக வழக்காளிகள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வழக்குக் குறித்து அறிவிக்கும் வகையில் மும்மொழிப் பத்திரிகைகளிலும் விசேட அறிவித்தலை வெளியிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனதா விமுத்தி பெரமுனை, சிஹல உறுமய, சிங்கள ஜாதிக சங்கமய என்பன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளன.

இதில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட மற்றைய நபர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகள் எவற்றைக் கோருகின்றனர் அரசு தெளிவுபடுத்த வேண்டுமாம்!

## ஜே.வி.பி கோரிக்கை விடுக்கிறது

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன், ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி பேச்சுக்களை நடாத்தி வருவது பாரதூரமான குற்றமாகும் என ஜே.வி.பியின் பிரச்சார செயலர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சமாதானப் பேச்சுக்களை நடாத்திவருகின்றன. இதன்போது, வடக்கு - கிழக்கு நிர்வாக அலகு, வடக்கு - கிழக்கு நிதியத்தினைத் தமதாக்குதல், கடற்பகுதிகளைத் தமதாக்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் மூடிமறைக்கின்றது. விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சின்போது, என்னென்ன விடயத்தைக் கோருகின்றார்கள் என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும் எனக் கோரிக்கைவிடுத்தார்.

நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பேச்சுக்களை நடத்தி வருகின்றார். குற்றவாளியான பிரபாகரனுடன் பேச்சுக்களை நடாத்துவதானது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். இதற்கு நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## வடக்கு - கிழக்கு..

கும், அதிக அதிகாரங்களைக் கொண்ட கட்டமைப்பு ஒன்று அவசியம் உருவாக்கப்படவேண்டும் என்றும், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர்.

மேலும், வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளவேண்டிய மனிதாபிமான புனரமைப்புப் பணிகள் இனங்காணப்பட்டு அதற்கான செயற்திட்டங்களை மேற்படி கட்டமைப்பினூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், பிரதமரிடம் அவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்தச் சந்திப்பின்போது பிரதமருடன் - பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், சரித்த ரத்வத்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர். (200)

## ரோக்கியோ....

கடந்த 13 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்தபோது, அவர் தெரிவித்த சில பிரச்சினைகள் சம்பந்தமாகப் பிரதமரிடம் பேசினோம்.

ஒஸ்லோ மாநாட்டில் 70 மில்லியன் அமெரிக்க டொல்கள் சிறான அமைப்புக்கு கொடுப்பதாக உறுதிமொழி அளிக்கப்பட்டது. அதில் ஒரு சதம்கூட வந்துசேரவில்லை.

இப்படியான சூழலில், ரோக்கியோவில் நடைபெறும் மாநாட்டில், கோடிக்கணக்கான டொலர்கள் கொடுக்கப்படுகின்ற பாரிய மாநாட்டிலே, அதிருப்தியான, அவநம்பிக்கையான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் எப்படிக் கலந்துகொள்வது?

வட - கிழக்கிற்கு வருகின்ற உலகநாடுகளால் வழங்கப்படுகின்ற பணம், வட - கிழக்கிற்கு கொடுக்கப்படவேண்டும். அதற்கென ஒரு நிதியம் அமைக்கப்படவேண்டும். அந்த நிதியத்தில் இருக்கின்ற பணம் அவற்றை எப்படி, எந்தெந்தத் திட்டங்களுக்கு எப்படிச் செயற்படுத்த வேண்டும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு விடுதலைப் புலிகளிடம் இருக்கவேண்டும்.

கொடுக்கப்படுகின்ற நிதி உண்மையாக வட - கிழக்கு மாகாணங்களில் செலவழிக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் இப்படியான நிதி, வட - கிழக்கு மாகாணத்துக்கு செலவு செய்யாமல் யுத்தத்துக்குப் பயன்படுத்தப்பட்ட அனுபவம் எல்லாம் எமக்குத் தெரியும்.

நாங்கள் எடுக்கின்ற முயற்சி இன்னும் இரண்டு மூன்று தினங்களில் வெற்றிபெறாவிட்டால், அடுத்த நடவடிக்கை ரோக்கியோ மாநாட்டை ஒத்திவைக்குமாறு கோருவதுதான் என்றார்.

# 'மொறட்டுவ சமன்' நேற்று சுட்டுக்கொலை

(கொழும்பு)

மொறட்டுவப் பகுதியைச் சேர்ந்த பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர் ஒருவர், இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மொறட்டுவப் பாலத்திற்கு அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், 'மொறட்டுவ சமன்' என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவராவார்.

மொறட்டுவ நீதிமன்ற நீதிவான், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடாத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டவர், பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் என்றும், இவர் ஏற்கனவே தேடப்பட்டுவந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (01)

## யாழ்.செயலக...

விடுக்கப்பட்ட போதிலும் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையினையும் அரசாங்கம் எடுக்காததைக் கண்டித்துமே இன்றைய போராட்டம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மறியற் போராட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் கூட்டமைப்பு பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளதுடன், கூட்டுறவுச் சங்கங்களினதும் மற்றும் திணைக்களங்களினதும் தலைவர்களும் இன்றைய மறியற் போராட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். (லி)

## கண்காணிப்பு..

தன் மூலம் அவர்கள் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் கடற்படையினரின் முயற்சிக்குப் பாதகம் செய்துள்ளனர் என்று கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இக்கண்காணிப்புக் குழுவினரின் சட்டபூர்வமற்ற பணிப்புரைகளை, கடற்படை ஏற்கமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.26 | 96.72 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 148.54 | 149.88 |
| 1 யூரோ | 96.93 | 97.07 |
| 1 சுவிஸ் பிராங் | 64.30 | 65.30 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 55.27 | 56.25 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.00 | 25.00 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.